297/2.61

REGISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

மே—1961.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| 'ஹவாஸே கம்ஸா' என்னும் பஞ்சேந்திரியங்கள் ... | 1 |
| சரீர—ஆத்ம இரு வகை ஹிருதய நோய்கள் டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி) ... | 7 |
| பதருன்னிஸா (தொடர் கதை) (எ. ஆர். கமால்) | 11 |
| திருக் குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) | 19 |
| ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் ஜீவிய சரிதை (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் பாகவி) ... ... | 23 |
| முன்னேற்றம் காண்பாய் (வேளாங்கண்ணி எ. எம். இபுறாஹீம்) ... | 27 |
| அழகு ராணி—ஹுஸ்ன் ஆரா (சிறுவர் பகுதி) டி. எப். ரஹ்மத்துல்லா-மஆலி ஸாஹிப் (பாகவி) | 29 |

...ல் இஸ்லாம் ஆபீஸ்:
...ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5.

3L
இ...211, N24 SI
N.61
187082

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–50 |
| தனிப் பிரதி நயா பைஸா | | 0–13 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–00 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5


## தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்.

7-வது (கடைசி) பாகம்

**வெளிவந்து விட்டது.**

இதில் 26-வது ஜுஸுவில் 50-வது ஸூரா முதல், 30-வது ஜுஸுவில் 114-வது ஸூரு முடிய 65 ஸூருக்களின் தப்ஸீர் அடங்கியது. 1204 பக்கங்கள் கொண்டது.

கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 16

கிடைக்குமிடம்:—
**ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.**
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்

மே—1961.

## 'ஹவாஸே கம்ஸா' என்னும் பஞ்சேந்திர்யங்கள்

இயற்கையின் சிருஷ்டிகர்த்தாவாகிய அல்லாஹு தஆலா, மனிதர்களாகிய நமக்குப் பல 'சக்தி' களை அருள்புரிந்துள்ளான். இதைத் தமிழில் **பஞ்சேந்திர்யங்கள்** என்று சொல்லுகிறோம். ஐவகை ஸ்பரிச உணர்ச்சிகள் என்றும் சொல்லலாம். 'ஹவாஸே கம்ஸா' என்றும் அரபியில் சொல்லுகிறோம்.

அரபியில் இவ்வைவகை சக்திகளை (1) குவ்வத்தே பாஸிரா (2) குவ்வத்தே ஸாமிஆ (3) குவ்வத்தே ஷாம்மா (4) குவ்வத்தே ஜாயிக்கா (5) குவ்வத்தே லாமிஸா என்றும் பிரித்துச் சொல்கிறார்கள். அதாவது (1) பார்க்கும் உணர்வு (2) கேட்கும் உணர்வு (3) முகரும் உணர்வு (4) ருசிக்கும் உணர்வு (5) தொடும் உணர்வு என்றும் சொல்கிறார்கள்.

இந்த ஐந்து வகை சக்திகளை, இறைவன், நம் சரீரத்தில் அமைந்துள்ள ஐந்து உருப்புகளுக்கு (இந்திர்யங்களுக்கு) அளித்திருக்கின்றான். அவை (1) கண் (2) காது (3) மூக்கு (4) நாவு (5) சருமம் என்பனவாகும்.

இந்த அபூர்வ சக்திகளை "ஹவாஸே கம்ஸா" என்று அரபியில் சொல்கிறார்கள். 'ஹவாஸ்' என்பது 'ஹிஸ்' என்பதன் பன்மையாகும். ஹிஸ் என்றால் உணர்ச்சி என்று பொருள். எனவே இப்பஞ்சேந்திரியங்களை 'ஆலாத்தே ஹிஸ்ஸி' என்றும் 'ஹவாஸே கம்ஸா' என்றும் சொல்கிறார்கள்.

செயற்கையும் இயற்கையும் ஒன்றே யல்ல. மனிதன் செயற்கை முறையில், வெளி உலக விவகாரங்களுக்காக, சில செயற்கை சக்திகளை உற்பத்தி செய்து உபயோகித்து வருகின்றான். அவைகள் மூலம் பல அற்புதக் காரியங்களைச் சாதித்து வருகின்றான். உதாரணமாய், 'எலெக்டிரிக்' என்னும் மின்சார சக்தி, 'ரேடியோ' என்னும் ஆகாய ஒலி அலை சக்தி, டெலகிராம் என்னும் கம்பித் தொடர் ஒலி பரத்தல் என்கிற தந்தி சக்தி, 'ஒயர் லஸ்' என்னும் கம்பியில்லாத்தந்தி சக்தி, 'டெலிவிஷன்' என்னும் ஒலி ஒளித் தொடர்பு மயமான தூரதர்ஸினி சக்தி என்றெல்லாம் எத்தனையோ அற்புதங்களை, இந் நவீன நாகரிக உலகில் மனிதன் கண்டு பிடித்து அனுபவித்து வருகின்றான்.

* * * *

இந்த சக்திகளைக் கண்டு பிடிக்கும் ஆற்றலை, எல்லாம் வல்ல இறைவன், தன் அடியார்களான மாந்தர்கட்கு அருள் புரிந்துள்ளான். இந்த அற்புத சக்திகள் வெளியுலகமாகிய பிரபஞ்சக் காரியாதிகளில் அமைந்திருப்பதைப் போலவே, நம் சொந்த அற்புதப் பிரபஞ்சமாகிய சரீரத்தினுள்ளும் அமைந்திருக்கிறது. இதனை இயற்கை அற்புதங்கள் என்றும், அதனை செயற்கை அற்புதங்கள் என்றும் சொல்லவேண்டும்.

அந்தச் செயற்கை அற்புதங்களை நாம் உலக விவகாரங்களில், தந்தி, டெலிபோன், ரேடியோ, டிரங்க்கால், ஒயர்லஸ், டெலிவிஷன், டெலிபிரிண்டர்கள் மூலம் அறிந்தும் அனுபவித்தும் வருகின்றோம். ஆனால் இயற்கையாக நம் சரீரப் பிரபஞ்சத்தில் அமைந்துள்ள இத்தகைய அற்புத சக்திகளை, அனுதினமும் அனவரதமும் நாம் அறிந்து அனுபவித்துத்தான் வருகின்றோம். எனினும் நம்மில் பலர் இதனை ஆழ்ந்து உணர்ந்து ஓர்ந்து பார்ப்பதில்லை.

ஓர்ந்து பார்ப்பின், நம் சரீரத்துக் குள்ளவே, பஞ்சேந்திரியங்களாகிய கண், காது, மூக்கு, நாவு, சருமம் இவைகள் மூலம், மேற்கூறியபடி தந்தி, ரேடியோ, டெலிபோன், டெலிவிஷன்

180082

சக்திகளை அறிந்தும் அனுபவித்தும் வருகின்றோம். அதாவது நமது சரீர அவயவங்களில் போட்டோ பிடிக்கும் கேமரா லென்ஸாக நம் கண்கள் உபயோகமாகி வருகின்றன. காதுகள், டெலிபோன் ரிஸீவிங்காக உபயோகமாகி வருகின்றன. நாவு, லவுட்ஸ்பீக்கராக உபயோகமாகி வருகின்றது. மூக்கு ஒலி அலையை ஈர்க்கும் டிரான்ஸ்மிட்டர் போல் உபயோகமாகி வருகின்றது. சரீரமோ, ரோடியோவுக்கு மிக அத்தியாவசியமான 'எர்த்' என்னும் பூமியாகவும் 'ஸ்கை' என்னும் வான வெளியாகவும் உபயோகமாகி வருகின்றன. எனவே நம் சரீரத்திலுள், இயற்கையாக அமைந்த சைன்ஸ் பிரகாரம், சகல விஞ்ஞானக் கருவிகளும், சக்தியானுசாரம் அமைந்திருக்கின்றன.

* * *

எனவே அவற்றின் சில விளக்கங்களை, பாமரர்களின் பரிபாஷையில் கூறுவோம்.

**'கண்' என்னும் குவ்வத்தே பாஸிரா:—** கண்கொண்டு எதையும் பார்க்கின்றோம். இரண்டு கண்களும் நமக்கு ஏக காலத்தில் உபயோக மாகின்றன. இரண்டு கண்களும் ஒன்றையே கூர்ந்து நோக்கி நமக்குச் செய்தி அறிவிக்கின்றன.

நமது சரீரத்தில் பல அவயவங்கள் இருப்பது போல் கண்ணும் ஓர் அவயவமேயாகும். இது மிக நுண்ணியதும் அற்புத திருஷ்டி சக்திவாய்ந்தது மாகும்.

உதாரணமாய்: கண், சற்று தூரத்திலுள்ள ஒரு பொருளைப் பார்க்கிறது; உடனே அது, அதன் உருவத் தோற்றத்தை சூக்ஷம ரீதியில் படம் பிடித்துக் கொள்கிறது. பிறகு அதை, அது நுண்ணிய நரம்புகள் (உணர்ச்சிகள்) வழியாக மூளை என்னும் மத்திய நிலையத்துக்கு அனுப்புகிறது. மூளை அதை அங்கீகரித்துக் கொண்டு, அது சம்பந்தமாய் மற்றும் நான்கு இந்திரியங்கள் என்ன செய்யவேண்டு மென்பதை யொட்டி, கட்டளை பிறப்பிக்கின்றது. அதற்கிணங்கி கை கால்கள் செயல் புரிகின்றன.

கண்களுக்குப் பாதுகாப்பாக இருந்து துணை புரிபவை இமைகளும் புருவங்களுமாகும். அடிக்கடி இமை கொட்டுவது கண்ணோட்டத்துக்கு மிக அத்தியாவசியமான செயல்களாகும். கண்கள் மிக நுண்ணியமானவை. சிறுதாக்குதலையும் அவை

34 
Q 7 ...

சமாளித்துத் தாங்கிக் கொள்ளமுடியாது. எனவே கண்களுக்கு இமைகள் பாது காப்பு அளிக்கின்றன.

* * * *

**காது என்னும் குவ்வத்தே ஸாமிஆ:**—கேட்கும் சக்திக்குரிய அங்கமாய் நம் சரீரத்தில் இரு காதுகளும் விளங்குகின்றன "யானை வரும் பின்னே மணி ஓசைவரும் முன்னே" என்றொரு பழமொழியுண்டு. கண்ணின் பார்வை சக்திக்கு முன்னால் காதின் கேட்கும் சக்தி முன் சென்று விடும் என்பது இதன் கருத்து

உதாரணமாய் பெரிய வெடி சப்தம் கேட்ட பின் கண்கள் அந்தப் பக்கம் நோக்கி அதென்ன வென்று அறிகின்றன ஆகாயத்தில் ஒரு சப்தத்தைக் கேட்டு கண்கள் அந்தப் பக்கம் நோக்கி ஆகாய விமானம் செல்வதை அறிகின்றன; இவை சகஜம்.

சில சமயம், முதலில் வெளிச்சத்தை கண்கள் பார்க்கின்றன; பிறகே அது சம்பந்தமான சப்தத்தை காதுகள் கேட்கின்றன. இதற்கு உதாரணம் மின்னலும் இடியோசையு மாகும். முதலில் வானம் மின்னுகிறது; பிறகு இடி யோசையை நாம் உணர்கிறோம்.

ஒலி—ஒளி என்றுள்ள இரண்டு சக்திகளுக்கு உறைவிடம் நமது காதுகளும் கண்களுமாகும், உலகம் இதனுள் அடங்கி யிருக்கிறது, இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு

காதுகள் எப்படி கேட்கும் சக்தியைப் பெறுகின்றன? இதில் அல்லாஹுதஆலாவுடைய 'குத்ரத்' அமைந்திருக்கிறது. ஒரு மென்மையான சப்தம் கூட காதுகளில் விழுந்ததும், காதினுள் உள்ள மெல்லிய நரம்புகள் அதை, ராஜக் கருவியாகிய மூளைக்கு அறிவித்து விடுகின்றன. பிறகு மூளை மற்ற அவயவங்களுக்கு, அது சம்பந்தமாய் கண், கை, கால்கள் என்ன செய்ய வேண்டுமென கட்டளை பிறப்பிக்கிறது.

நாம் கண்களைப் பாதுகாப்பதைப் போலவே காதுகளையும் பாதுகாக்க வேண்டும். காதுகளில் தூசும் அழுக்கும் குரும்பியும் சேர்ந்து அடைத்துக் கொள்ளாமற்படி பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பயங்கரமான இடி, வெடி, சப்தங்களை கேட்க நேரிட்டால் காதுகளை பொத்திக் கொள்ள வேண்டும். இன்றேல், தீங்கு ஏற்படலாம்.

நல்ல பேச்சுகளையும் உபதேச மொழிகளையும் காது கொடுத்துக் கேட்க வேண்டும்; கெட்ட பேச்சுகளையும் தீய சப்தங்களையும்

விட்டும் காதுகளை பேணிக் கொள்ள வேண்டும். எனவே சில சந்தர்ப்பங்களில் மனிதன் குருடனாகவும் செவிடனாகவும் கூட நடிக்க வேண்டியிருக்கிறது.

* * *

நாவு என்னும் குவ்வத்தே ஜாயிகா:— நாவு பேசுவதற்கு மட்டும் தான் உபயோகமாகி வருகிற தென்று எண்ண வேண்டாம்; அத்துடன் ருசி பார்ப்பதற்கும், நாம் உண்ணத் தக்க பண்டம் எது, உண்ணத் தகாத பண்டம் எது? என்று உணர்வதற்கும் நாவு மிகப் பயன்படுகிறது.

ஒரு பண்டத்தை நாம் நாக்கு நுனியில் வைத்து அது இனிப்பா, கசப்பா, புளிப்பா, உறைப்பா, கரிப்பா என்பதை உணர்ந்து உடனே அதை மூளைக்கு அறிவிக்கிறது. பிறகு மூளை கைகளுக்கும் பற்களுக்கும் அது சம்பந்தமாக கட்டளை பிறப்பிக்கிறது. பிறகு வயிறு நிரம்புகிறது. தேகத்துக்கு சக்தி உண்டாகிறது.

உறைப்பான மிளகாயை கடித்தால் கண்ணில் ஜலம் வந்து விடுகிறது; புளிப்பான ஊறுகாயைக் கடித்தால் கண் மூடிக் கொண்டு உடல் சிலிர்க்கிறது. இவ்வளவு சீக்கிரத்தில் நாக்கு நுனி மூலம் உடல் முழுதுக்கும் சக்தி பரவ விடுகிறதே இது, மிக ஆச்சரியமல்லவா? இதில் அல்லாஹ் உடைய குத்ரத் காணப்படுகிறதல்லவா?

* * * *

மூக்கு என்னும் குவ்வத்தே ஷாம்மா:— கண்ணைப் போலும் காதைப் போலும் மூக்கானது, மனிதனுக்கு அதிக உபயோக முள்ள தல்ல வென்று சிலர் கருதலாம். ஏனெனில், மூக்கினால் சில பேருக்கு, ஜல தோஷத்தினால் அடிக்கடி சளி சிந்திக் கொண்டிருக்க வேண்டிய தொந்தரவு உண்டாகிறது: சில பேருக்கு மூக்கடைபட்டு பொடிபோட வேண்டிய அவசியம், அல்லது நசியம் முகர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

இதெல்லாம் மனிதன் தானே உண்டாக்கிக் கொள்ளும் துன்பங்களே யாகும். மூக்கைக் கொண்டு நாம் எப்போதும் சுவாசித்துக் கொண்டே இருக்கிறோமே! இது, ஆண்டவன் நமக்களித்த மாபெரும் பாக்கிய மாகும். பிறந்தது முதல் இறக்கும் வரையில் நம் அருமை மூக்குக்கு ஓயாமல் வேலை இருந்து வருகிறது. ஒரு நொடியும் அதற்கு ஓய்வு இல்லை. கண், நாம்

தூங்கும் போது பார்ப்பதில்லை; அப்போது காதுகளும் கேட்பதில்லை; நாவும் பேசுவதில்லை; ருசி பார்ப்பதில்லை; ஆனால் மூக்கு மட்டும் ஓயாமல் மூச்சு என்னும் சுவாசத்தை விட்டுக் கொண்டும் இழுத்துக் கொண்டும் இருக்க வேண்டியிருக்கிறது. ஒரு மூச்சு திணறி நின்று விட்டாலும் நாம் இறந்து விடுவோம். இதற்காகவும் நாம் ஆண்டவனுக்கு மிக மிக 'ஷுக்ரு' செய்ய வேண்டும்.

'குவ்வத்தே ஷாம்மா' என்றால் முகரும் சக்தி என்று பொருள். நல்ல வாசனை, கெட்ட நாற்றம் இன்னதென பாகுபாடு செய்து உணரும் சக்தி மூக்குக்குத்தான் உண்டு, புஷ்பத்தை விரும்புகிறோம், சாக்கடையை வெறுக்கிறோம்.

* * * *

ஸ்பரிசம் என்னும் குவ்வத்தே லாமிஸா:—

பஞ்சேந்திரியங்களில் ஐந்தாவது தொட்டு உணர்வது என்பதாகும். நம் சரீரம் முழுதும் மிக நுண்ணிய சக்திவாய்ந்த சருமம் என்னும் தோல் போர்த்தப்பட்டிருக்கிறது. இத்தோலில் உஷ்ணமோ குளிர்ச்சியோ பட்டால், உடனே அதன் பலாபலன் உடல் முழுதும் பரவுகிறது. நெருப்பு எங்கேனும் உடலில் பட்டால் நம் உடல் முழுதும் பதறி விடுகிறது. பனிக் கட்டியில் கை வைத்தாலும் அதனை மூளை ஏற்று உணர்கிறது.

நடக்கும்போது காலில் முள் குத்தினால் 'ஐயோ' என்று துடித்து விடுகிறோம். முள் காலைத்தானே குத்தியது; நாவு ஏன் கூச்சல் போடுகிறது? முள் காலைத் தொட்ட உணர்ச்சி உடனே மூளைக்குச் சென்று அதன் கட்டளைப்படி நாவு கூச்சல் போடுகிறது.

இவ்வாறு மனித சரீரத்திலுள்ள ஐம் பெரும் உணர்வு சக்திகளான 'ஹவாஸே கம்ஸா' வினால், மனித வாழ்வும் சுக துக்கமும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இதற்கெல்லாம் ராஜாவாக தலைமை ஸ்தானமாக மூளை அமைந்திருக்கிறது.

மனிதன் இயற்கையாகவும் செயற்கை யாகவும் இந்த சக்திகளை உணர்ந்து பார்க்க வேண்டும். இந்த விஞ்ஞானத்தில் மெஞ்ஞானமும் அடங்கி யிருக்கிறது. "தன்னை உணர்ந்தவன் நாயனை உணர்வான்" என்ற மஃரிபத்தும் இதில் அடங்கி யிருக்கிறது.

# சரீர—ஆத்ம இரு வகை ஹிருதய நோய்கள்

### டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## (1)

### சரீர ஹிருதயம்

இப்போது, இக்கவீன நாகரிக வாழ்வில் வயப்பட்ட மனிதர்கள், எங்குப் பார்த்தாலும், திடீர் திடீர் என்று மாண்டு போகும் செய்தியை, தினமும் நாம் கேள்விப் படுகின்றோம். இதற்குப் பிரதானமான காரணம்: இக்காலே சுகவாழ்விலுள்ள மனிதர்களை, ஒரு வகை ஹிருதய வியாதி பீடித்துக் கொண்டிருக்கிறது. இதை HEART DISEASE (மன நோய்) என்று சொல்கிறார்கள்.

இருதய நோய் என்னும் இந்த வியாதி யாரைப் பீடிக்கும் யாரைப் பீடிக்காது என்று, கெட்டிக்கார டாக்டர்களாலும் முன் கூட்டிக் கண்டு பிடித்துக் கூற முடிவதில்லை. சில சமயம் டாக்டர்கள் கூட எதிர்பாராத விதமாய் இந்த ஹிருதய நோய்க்கு இலக்காகி திடீர் என்று மாண்டு போவதுண்டு.

வீட்டில் இருக்கும் போதும் சரி, பிரயாணப்பட்டு போய்க் கொண்டிருக்கும் போதும் சரி, உட்கார்ந்திருக்கும் போதும் சரி, படுத்திருக்கும் போதும் சரி, பேசாதிருக்கும் போதும் சரி, நடந்து கொண்டிருக்கும் போதும் சரி, விழித்திருக்கும் போதும் சரி, தூங்கிக் கொண்டிருக்கும் போதும் சரி, எதிர்பாரா வண்ணம் இந்த ஹிருதய நோய் வந்து பீடித்து, ஒரு கொடிக்குள் நல்ல திடதேகியான மனிதனை மரிக்கச் செய்து பிணமாக்கி விட்டுப் போய்விடுகிறது. இதை HEART FAILURE 'மாரடைப்பு' என்று பாமரர்கள் சொல்லி விடுகிறார்கள்.

உண்மையில் இது 'மார்பு அடைப்பு' இல்லை. "இருதய இரத்த ஓட்டத் தட்டுப்பாடு" ஆகும். மனிதனுக்கு எத்தனையோ வியாதிகள் உண்டாகின்றன. அவற்றில் மிகப் பயங்கரமான வியாதி இருதயத்தை யொட்டிய இந்த நூதன வியாதியே யாகும்.

மனிதனுடைய உருப்புக்களில் மிகவும் முக்கியமானதும் மிக நாஸூக்கானதும் சிக்கலானதுமான அங்கம் இருதயமே யாகும். இதை அரபியில் **கல்ப்** என்றும், உர்தூவில் **தில்** என்றும், தமிழில் 'உள்ளம்' என்றும் ஆங்கிலத்தில் 'ஹார்ட்' என்றும் சொல்கிறார்கள்.

இந்த இருதயமானது, மனித சரீரத்தின் மத்தியமான பாகத்தில், கொஞ்சம் இடது பக்கமாக, பலமான நெஞ்சுக் கூட்டுக்குள், பத்திரமாய் பாதுகாக்கப்பட்ட இடத்தில் பொருத்தப்பட்டுள்ள ஓர் அற்புதமான சதையாலான அவயவ மாகும். ஒவ்வொரு மனிதனும் தன் கையை மூடினால் அவனது முஷ்டி எத்தனைப் பெரியதாய் இருக்கிறதோ அத்தனைப் பெரிதாய் அந்த 'ஹிருதயக் கமலம்' இருக்கும் என்று சொல்கிறார்கள்.

சரீரத்தில் இந்த ஹிருதய பாகத்தின் தொழில் என்ன தெரியுமா? வயல்க க்கு நீர் பாய்ச்சுவதற்கு இக்காலே 'ஜல சூத்திரம்' என்னும் 'பம்பு' (Pump) பொருத்தப்படுவதை பார்த்திருப்பீர்கள். அது கிணற்று ஜலத்தை அல்லது வாய்க்கால் ஜலத்தை இழுத்து, சம்பந்தப்பட்ட வயல்களுக்கு பாய்ச்சிக் கொண்டிருக்கும். எனவே ஹிருதய பாகத்தை, நம் சரீரத்துக்குள் அமைந்திருக்கும் இரத்தம் என்னும் தண்ணீரை இழுத்து நரம்புகள் வழியாக உடலெங்கும் பாய்ச்சிக் கொண்டிருக்கும் ஒரு வகை ஜல சூத்திரம் (பம்பு) என்று சொல்லலாம்.

இது ஒரு நாளைக்கு 3000 காலன் அளவு இரத்தத்தை, சரீரத்தினுள்ளேயே பல ஆயிரம் மைல் நீளமுள்ள இரத்தக் குழாய்கள் வழியாக, ஆயுள் முழுதுக்கும் ஓய்வு ஒழிவு இல்லாமல் பாய்ச்சிக் கொண்டே (பம்ப் செய்து கொண்டே) இருக்கிறது. இம் முறையில் அது ஒரு நாளைக்கு ஓர் லக்ஷத்து 36 ஆயிரம் விடுத்தம் துடித்துக் கொண்டே இருக்கிறது. அதன் ஓயாத துடிப்பு தான் மனிதரின் ஆரோக்கிய வாழ்வுக்கு அடையாளம்.

இத்தகைய நுண்ணிய பாகமான ஹிருதயத்துக்கு, உடல் கூற்று வண்ணப்படி, ஆபத்துக்களும் அதிகம். இதை "அம்ராழும் கல்ப்" இருதய நோய்கள் என்னும மூன்று வகைக் கோளாறுகள் வந்து தாக்காதபடி பாதுகாத்துக் கொள்ள வேண்டும்:—1-வது வாத இருதய நோய்; 2-வது அதிக ரத்த அழுக்கம், 3—வது திடீர் இருதயத் தாக்குதல் என்பனவாம்.

(1) இருதயத்தில் அதிக வாதம் உண்டாய் விட்டால், இருதய கமலத்தில் அடைப்புக்களையும், தசை பாக வளர்ச்சியையும், உண்டாக்கி, இருதய இரத்த ஓட்ட அசைவு சக்தியை குறைத்துத் தடை செய்து விடுகிறது. இந்த இருதய வாத ரோகம் உண்டானால் இது மனிதனைப் படுத்த படுக்கையிலே போட்டு விடும். மூச்சுப் பேச்சு இல்லாமல் செய்து விடும் சில சமயம் உணர்ச்சியே இல்லாமல் போய் விடும். அந்நிலையிலே மனிதன் மரித்தும் போய் விடுவான்.

(2) அதிக இரத்த ஓட்டம் என்பது மிகக் கொடிய, பயங்கர வியாதியாகும். இதை 'ஹை பிளட் பிரஷ்ஷர்' என்று சொல்வார்கள்.

இருதயத்திலிருந்து இணைந்து போகும் இரத்தக் குழாய்களின் துவாரங்கள் (கொழுப்பு அடைப்பால்) சிறுத்துக் குறுகிப் போய் விடுவதால், இருதயத் துடிப்பு சரி வர இயங்குவதில்லை. எனவே இருதயம் சிரமப்பட்டு இரத்தத்தை வலிய இழுத்து 'பம்பு' செய்ய வேண்டி யிருக்கிறது. இங்ஙனம் இரத்தக் குழாய் தடித்து, துவாரம் சிறுத்துப் போய் விடுவதால், சில சமயம் இரத்த ஓட்டமே தடை பட்டுப் போய், மரணத்துக்குக் காரணமாய் விடும்.

(3) இருதயத் தாக்குதல் என்பது இறுதியான அபாயமாகும். மேற் கூறிய கோளாறுகளின் பயனாய், எதிர்பாராமல் திடீர் என்று ஏற்படும் சம்பவம் இது. இதை "ஹார்ட் அட்டாக்" என்று பொதுவாய் சொல்வர். பாமர மக்கள் இதை "மார் அடைப்பு" என்று சொல்லி விடுகின்றனர். இருதயத்திலிருந்து செல்லும் இரத்தக் குழாய்கள் சிறுத்து, அடைப்பு ஏற்பட்டு, அல்லது இரத்தம் கட்டி அடைத்துக் கொண்டு, வேலை செய்யா திருந்து விடுவதால் ஹிருதயம் துவண்டு போய், செயலற்று நின்று விடும். இதுவும் திடீர் மரணத் திலேயே கொண்டு போய் விடும்.

## (2)

## ஆத்ம ஹிருதயம்

மேற் கூறியவை யெல்லாம், உடற்கூற்று வண்ணப்படி, உலகில் டாக்டர்கள் என்னும் சரீர வைத்தியர்கள் கூறும் சரீர இருதய நோய் வரலாறாகும். ஆனால், அல்லாஹ் ரஸூல் கட்டளைப் பிரகாரம், நம் ஆத்மார்த்தப் பெரியோர்களான ஞானிகளும் உலமாக்களும் கூறும் ஆத்ம ஹிருதயம் சம்பந்தப்பட்ட வியாதி தனிப்பட்டதாகும். "ரூஹானி அம்ராலே கல்பு" (ஆத்மார்த்த ஹிருதய நோய்) என்று இதைக் கூறலாம்.

"மனிதனுடைய சரீரத்திற்குள் ஒரு சதைக் கட்டி இருக்கிறது, அது சரியாக இயங்கி வந்தால் மனிதன் நல்லவனாக வாழ்கிறான்; அது சீர் கெட்டுப் போனால், மனித வாழ்வே சீர் கெட்டுப் போகிறது" என்பது ஒரு நாயகத் திரு மொழிக் கருத்தாகும்.

இங்கு 'கல்பு' என்னும் மனம் கெட்டுப் போவதென்பது, பாப எண்ணங்களில் உழன்று, பாப காரியங்களில் ஈடுபட்டு மனிதன், ஆத்மார்த்த வாழ்வைப் பாழ்ப் படுத்திக் கொள்வதாகும். கெட்ட எண்ணங்களால் மனத்தில் களங்கம், துரு ஏறிப் போய் விடுகிறது. இருதயம் இளகும் தன்மைக் கெட்டு, கல்லைப் போல் கெட்டிப் பட்டுப் போய் விடுகிறது. மனது கல்லாய் விட்டால் மனிதன் பஞ்சமாப் பாதகச் செயல்களிலும் ஈடுபட்டுக் கெட்டொழிகின்றான்.

காம இச்சை, ஆசாபாசம், பேராசை, பணத்தாசை, பொறாமை ஆகியவைகளால், நப்ஸு என்னும் மனத்தில், பல கொடிய ஆத்ம வியாதிகள் உண்டாய் விடுகின்றன. இந்த ஆத்ம இருதய நோய்களுக்கு உலகில் எந்த டாக்டராலும் வைத்தியராலும் சிகிச்சை செய்ய முடியாது.

இந்தக் கொடிய மனோ வியாதிக்கு; தெய்வ அச்சமும், தூய எண்ணமும், பாவ மன்னிப்பும், பிராயச்சித்தமும், தவ்பா—இஸ்திக்பாரும், தொழுகையும், துஆவும், நல்லொழுக்கமும் தான் தக்க பரிகாரம். மனிதன், சரீர வியாதிக்குப் பயப்படுவதைக் காட்டிலும் இந்த ஆத்ம வியாதிக்கு அதிகம் பயப்பட வேண்டும்.

எல்லாம் வல்ல இறைவன் அல்லாஹ், நம்மனோரை சரீர மன நோய்களை விட்டும் காப்பாற்றுவதோடு, ஆத்ம மனநோய்களை விட்டும் காப்பாற்றி இன்னருள் புரிவானாக. ஆமீன் !


## மிஃறாஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்

(புதிய பதிப்பு)

“மிஃறாஜுல் ஆரிபீன்” என்பது பதினான்கு இல்முகளுக்கும் ஓர் அலை கடலாகிய நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹிமத்துல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றியுள்ள ஞானதீதக் களஞ்சியமான ‘மின்ஹாஜில் ஆபிதீன்’ என்னுங் கிரந்தத்திலிருந்து வெகு நுட்பா நுட்பமாக மொழி பெயர்த்ததோர் அரிய சாதனமாகும்; அறிவுக்கு ஆகாரமாம். இதில் அடங்கி யிருக்கும் ‘மஃரிபா’ என்னும் தீட்சை ஞானத்தின் பாகுபாடுகளையும், நேர்வழிக்குரிய சாதனத் தெளிவுகளையும், யோகாப்பியாச முறைகளையும் பற்றி விவரித் தெழுத வேண்டுமானால் எவ்வளவு நீடித் தெழுதினாலும் முடியாது. நோட்டமிட்ட நண்பர்களுக்கே இதன் அருமை விளங்கும்.

சுத்தத் தமிழ் கலிகோ பைண்டு விலை ரூ. 4

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5

# பதருன்னிஸா

## கற்பனே காவியம்

(ஏ. ஆர். கமால்)

## 5

பதருன்னிஸா நினேத்தாள்: 'ஒரு சமயம் எஸீதை தன்ஞல் கொல்ல முடியாவிட்டால்? அல்லது தக்க சமயம் வாய்க்காமல் போய் விட்டால் என்ன செய்வது? புனிதமான சத்திய இரத்தத்தால் உண்டான இந்தப் பூப்போன்ற உடலே அந்தப் பாவிக்கு பரிசாக வழங்க வேண்டியது தாஞ? கண்களே இமை காப்பதுபோல் இதுகாறும் காத்து வந்த இந்த கண்ணியமான கற்பை அந்தக் காமாந்திரகாரக் கயவனுக்கு காணிக்கையாக செலுத்த வேண்டியது தாஞ? இல்லே! இல்லே!! சத்தியமாக இல்லே!!! ஆண்டவன் மீது ஆணேயாக அப்படி நடக்க விடமாட்டேன். இந்தக் கத்தி எஸீதின் உடலே பதம் பார்க்க மறுத்தாலும் என் உடலே பதம் பார்க்க ஒரு கணமும் தயங்காது. என் கற்பு அழியுமுன் என் உயிரையே நான் அழித்துக் கொள்வேன்'

இவ்விதமான எண்ணங்களுக்கிடையே பதருன்னிஸா தன் சாட்டையில் சிக்க வேண்டிய எஸீத் என்னும் வேட்டையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சில விஞடிகளுக்குப் பின் எஸீத் வந்தான். காமஜ்வாலேயால் பிரகாசித்திருந்த அவன் கண்கள் அப்படியே பதருன்னிஸா மீது பதிந்து விட்டது. தன் ஆயுளிலே ஒரு முறை கூட மதுவையே பார்த்தறியாத பதருன்னிஸா, மதுவிலே பிறந்து மதுவிலேயே வளர்ந்த மங்கையைப் போல் வெகு திறமையோடு எஸீதுக்கு மதுவை ஊட்டிக் கொண்டிருந்தாள். அவளுடைய மயக்க பார்வையோடு மதுவும் கலந்து விட்டபடியால் எஸீதுக்கு தெரிந்தது ஏன்! நினேவில் இருந்ததுங்கூட பதருன்னிஸா ஒருவளே! அவளேத் தவிர அந்நேரத்தில் அவனுக்கு வேறு எதுவும் நினேவிலில்லே. அவன் எங்கே இருக்கிருன் என்ற நினேவுகூட அவனுக்கு இல்லே என்ருல் மிகையாது.

'எஸீத்' பதருன்னிஸாவை கட்டியணேக்க முயற்சிக்கும் போதெல்லாம் அவள் மது கிண்ணத்தையே அவன் கையில் தந்து தன்னேத் தொடாதபடி காத்துக் கொண்டாள். அதோடு எஸீதுக்கு மேலும் மேலும் மதுவை தந்து அவனே மயக்கத்தின் பாதாளத்தில் தள்ளிக் கொண்டிருந்தாள். தன் எண்ணம் ஈடேறும் சமயம்

நெருங்கி வருவதாக எண்ணி சந்தோஷம் கொண்டாள் பதருன்னிஸா. ஆனால் மனிதன் நினைத்தபடி எல்லாம் நடந்து விடுகிறதா?

எஸீத் மயக்கமாக இருந்த சமயம் பதருன்னிஸா தன் காரியத்தில் கண்ணாக இருந்து கடமையை நிறைவேற்றும் பொருட்டு கையில் கத்தியை எடுத்து எஸீதை குத்தபோகும் சமயம் 'டக்! டக்!!' என்று கதவு தட்டும் சப்தம் கேட்டு திடுக்கிட்டாள். பயத்தினால் அவள் உடலும் உள்ளமும் அதிவேகமாக துடித்தன. அவள் முகத்தில் பீதி பரவி விட்டது. கதவு தட்டும் சப்தத்தால் உணர்வு பெற்ற எஸீதும் திடுக்கிட்டான். கோபத்தால் அவன் கண்கள் சிவந்து மீசை துடித்தது.

"யார் அது?" சிம்ம கர்ஜனையில் கேட்டான் எஸீத்.

"ஆலம்பனா! நான்தான்!! இப்னஸியாத்!!!"

"இப்னஸியாத்! நீயா? இங்கேயா?? இக்நேரத்திலா???"

"ஆம் அரசே! அரசாங்க விஷயமாக ஒரு முக்கிய சமாசாரம்..."

"என் இன்பத்தைக் கலைக்காதே! அரசாங்க விஷய மெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். அல்லது எப்படி செய்ய வேண்டுமோ அதுபடி நீயே செய்துவிடு இக்நேரத்தில் என்னை தொந்திரவு செய்யாதே போ!" எஸீத் ஆங்காரத்தோடு கூறினான். எற்கனவே பயந்திருக்கும் பதருன்னிஸாவின் மனதில் எஸீதின் கர்ஜனை மேலும் திகிலை உண்டாக்கியது.

"மன்னவா! இது எவ்வளவு முக்கியமான விஷய மென்றால் ஒரு நிமிடம் தாமதித்தாலும் தங்கள் உயிருக்கே ஆபத்து வந்துவிடும்!" வெளியில் இருந்து இப்னஸியாத் சொன்னான்.

இதைக் கேட்டதும் எஸீதின் முகம் பேயறைந்தாற் போலாகி விட்டது. புலி சீறுவது போல் எழுந்து போய் கதவைத் திறந்தான்.

"அரசே! இந்தச் சதிகாரி தங்களுக்கு இன்பத்தைக் கொடுக்க வரவில்லை அதற்கு மாறாக தங்களைக் கொலை செய்ய வந்த காதகி இவள்" இப்னஸியாத் பதருன்னிஸாவை காட்டி கூறினான்.

எந்த பதருன்னிஸா சற்றுமுன் இன்பத்தின் சிகரமாக விளங்கினாளோ அதே பதருன்னிஸா இப்போது ஒரு கொலைகாரியாக காட்சி தந்தாள் எஸீதுக்கு.

எஸீத் இப்னஸியாதை உள்ளே அழைத்து வந்தான். எஸீத் கதவு திறக்க செல்லும் போது, பதருன்னிஸா தன் கையில் இருந்த கத்தியை ஒரு மூலையில் போட்டு விட்டாள். அந்தக் கத்தி இப்னஸியாத் வந்து சோதனை போட்டபோது அவன் கையில் சிக்கி விட்டது. ஆகவே, யாராலும் செய்ய முடியாத ஒரு காரியத்தை, தான் சாதித்து விட்ட சந்தோஷத்தில் புன் முறுவலோடு பதருன்னிஸாவைப் பார்த்தபடி அதை எஸீதிடம் கொடுத்தான். கத்தியைக் கண்டதும் எஸீதின் முகம் கொடூரமாக மாறியது.

அவன் முகத்தைப் பார்க்கவே பதருன்னிஸாவுக்குப் பயமாக இருந்தது.

"இந்தக் கத்தி எங்கிருந்து வந்தது?" எஸீத் கர்ஜித்துக் கேட்டான். பதருன்னிஸா பதில் சொல்ல வில்லை.

"நீ என்னைக் கொல்ல வந்தது உண்மையா?" மீண்டும் கர்ஜித்தான். அதற்கும் பதில் இல்லை.

"உன்னுடைய இச்செய்கைக்கு தண்டனை என்ன தெரியுமா?"

பதருன்னிஸா எதற்கும் வாய் திறக்க வில்லை. அவளுடைய மௌனம் எஸீதின் கோபத்திற்குத் தூபம் போட்டது எனவே அதே கத்தியால் அவளைக் கொல்ல கை ஓங்கினான். அதற்குள் இப்னஸியாத் அவனைத் தடுத்து, "கேவலமான இப்பெண்ணை கொல்ல கத்தியை ஏன் பாழ்படுத்த வேண்டும்? விஷத்தின் ஒரு சில துளிகளால் முடிந்து போகும் காரியத்தைக் கத்தியால் சாதிக்க வேண்டிய அவசிய மென்ன?" என்று கூறினான்.

விஷம் கொடுத்து சாகடிப்பது எஸீதுக்கு பழக்க மாகையால் இப்னஸியாத் சொல்லியபடி பதருன்னிஸாவுக்கும் விஷம் தயாரிக்கும்படி ஆணை யிட்டான்.

தன் ஆயுளை முடிக்கப் போகும் ஏற்பாடான விஷம் தயாரிப்பதை பதருன்னிஸா மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போதைய அவள் நிலை, கசாப்காரனின் கத்திக் கிடையில் கடைசி மூச்சுவாங்கிக் கொண்டிருக்கும் ஆட்டைப் போல் இருந்தது. 'தன் உயிர் போகிறதே' என்ற கவலை பதருன்னிஸாவுக்குக் கொஞ்சங்கூட இல்லை. ஆனால் 'கைக்கு எட்டிய வேட்டை—இல்லை—வலையில் சிக்கிய பறவை, பிடிக்கப் போகும் சமயத்தில் பறந்து விட்டதே! என்ற வருத்தம் தான் அவளுக்கு அதிகமாக இருந்தது.

விஷம் தயாரித்து பதருன்னிஸா இடம் கொடுத்தார்கள். அவள் யாதொரு தயக்கமும் சுணக்கமும் யின்றி 'கட், கட்' என்று குடித்து விட்டாள். சில நிமிடங்களுக்குப் பின் அவள் வெட்டிய மரம் போல் கீழே சாய்ந்து விட்டாள். பதருன்னிஸா கீழே சாய்ந்ததும் அவளை இப்னஸியாத் வசம் ஒப்படைத்து அடக்கம் செய்து விடும்படி கட்டளை யிட்டான் எஸீத்.

பதருன்னிஸா உண்மையில் சாகவில்லை. அவளுக்குக் கொடுத்ததும் விஷம் அல்ல. பதருன்னிஸாவை எப்படியும் தான் அடைய வேண்டு மென கங்கணம் கட்டியிருந்த இப்னஸியாத், எஸீத் அவளைக் கொல்லும் சமயம், விஷத்தினால் கொன்று விடலாம் என்று கூறி, விஷத்திற்கு பதிலாக மயக்க மருந்தைக் கொடுத்து பதருன்னிஸாவை மயக்க முற செய்தான். இதை அறியாத எஸீத், அவள் இறந்து விட்டாள் என கருதி, அவளை அடக்கம் செய்ய இப்னஸியாதிடம் ஒப்படைத்தான்.

தான் நினைத்த படியே முடிந்த மகிழ்ச்சியில் இப்னஸியாத் பதருன்னிஸாவை தன் இருப்பிடத்திற்குக் கொண்டு வந்து விட்டான். இப்போது அவள் இப்னஸியாத் இல்லத்தின் ஒரு பஞ்சணை யில் உணர்வற்றுக் கிடந்தாள். இப்னஸியாத் பேசா பதுமையான பதருன்னிஸாவையே பார்த்துக் கொண்டிருந்தான். அவளுடைய ஒவ்வொரு அங்கமும் அவனைப் பைத்தியக் காரனுக்கிக் கொண்டிருந்தது. 'அவள் எப்போது கண் திறப்பாள்' என்று ஏக்கத்தோடு அவள் உணர்வு பெறும் நேரத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்திற்குப் பின் பதருன்னிஸாவின் உடல் ஆடியது. அதே சமயம் இப்னஸியாதின் இருதயமும் துடித்தது. அவன் தோள் வலிமையும் வீரமும் கொண்ட பராக்கிரம சாலி என்ற பட்டம் பெற்று இருந்தான். ஆனால் இன்று கேவலம் ஒரு கன்னியின் எதிரில் தன்னை ஒரு கோழை என்றே உணர்ந்தான். அதோடு அவனுடைய சிந்தனை பறவை சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது.

'பதருன்னிஸாவின் உயிரைக் காப்பாற்றியதற்காக நிச்சயமாக அவள் என்னை விரும்புவாள்! இல்லை! இல்லை! அவள் அஹ்லபைத்தைச் சேர்ந்தவள். அஹ்லபைத்தின் ஒவ்வொரு எதிரியும் அவளுக்கு விரோதியே! அதனல் அவள் என்றும் என்னை விரும்ப மாட்டாள்.' இப்னஸியாத் இவ்விதமாக எண்ணிக் கொண்டிருந்த சமயம் பதருன்னிஸா கண்களைத் திறந்தாள். இப்னஸியாத் மகிழ்ச்சிக் கொண்டான் என்ருலும் அவன் மனம் முன்னைவிட அதிகமாக துடிக்க ஆரம்பித்தது.

பதருன்னிஸா கண்ணைத் திறந்து பார்த்தபோது தன்னை ஒரு அழகிய அரண்மனையில் இருப்பதைக் கண்டு, அவள் மரணமாகி விட்டதாக நம்பி விட்டாள். ஆகையால், 'இதுதான் சுவர்க்க லோகமாக இருக்கும்!' என்று எண்ணியபடி அந்த மஹலின் நான்கு புறமும் பார்வையைச் செலுத்தி வந்தாள். அப்போது அவள் பார்வை இப்னஸியாத் மீது பட்டதும் அளவுக்கு மீறிய ஆச்சரியம் கொண்டாள். 'என்ன! நான் இன்னும் உயிருடன் தான் இருக்கிறேனு? பாவி எஸீதின் கையில் இருந்து எனக்கு இன்னும் விமோசனம் கிடைக்கவில்லையா? இதைப் பார்த்தால் எஸீதின் அந்த புரமாக தோன்ற வில்லையே! வேறு இடமாக அல்லவா இருக்கிறது! இங்கு இந்தப் பாவி இப்னஸியாத் எப்படி வந்தான்?' இவ்விதமாக எண்ணிக் கொண்டு மருண்ட பார்வை யோடு தாழ்ந்த குரலில் "நான் எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டாள்.

"பயப்படாதே பதருன்னிஸா! நீ இருக்க வேண்டிய இடத்தில் தான் பத்திரமாக இருக்கிருய்" அன்பும் ஆசையும் கலந்து கூறினன் இப்னஸியாத்.

"இருக்க வேண்டிய இடம்! பத்திரமான இடம் என்றால்?"

"அதாவது இப்னஸியாதின் 'மஹல் ஸரா' வில் என்று அர்த்தம்."

"அப்படியானால் அரசர் எஸீத்?"

"நீ இறந்து விட்டதை அவர் நம்பி விட்டார்!"

"நீங்கள்........."

"நான் என் உயிரை பந்தயம் வைத்து உன் உயிரைக் காப்பாற்றிய இப்னஸியாத்!" இதைச் சொல்லி விட்டு அவன், ஒரு தேவியின் முன்பு பக்தன் எப்படி தலை குனிந்து வணங்குவானோ அதேபோல் பதருன்னிஸாவின் முன் குனிந்து விட்டான்.

பதருன்னிஸாவின் மனதில் மீண்டும் சஞ்சலத்தின் புயல் அதிவேகமாக வீசத் தொடங்கியது. ஒரு கஷ்டக்கடலில் இருந்து கரையேறியபின் அவள் விதி மீண்டுமொரு கஷ்டக்கடலில் வீசி எறிந்ததை நினைத்து அந்தக் கஷ்டத்திலும் குறு நகை புரிந்தாள் பதருன்னிஸா.

இப்னஸியாத் பதருன்னிஸாவின் உயிரைக் காப்பாற்ற எவ்விதமான சூழ்ச்சிகளை மேற் கொண்டான் என்பதை விளக்கிய பின் மேலும் கூறினான்:

"பதர்! அரசனுடைய ஆசையில் மண்ணைப் போட்டு உன்னைக் காப்பாற்றிய விஷயம் எஸீதுக்குத் தெரிந்தால் என் கதி என்ன ஆகும் என்பதை நினைத்துப்பார்! உனக்காக நான் ஒரு பெரிய அபாயத்தை வலிய வாங்கிக் கொண்டேன். இவைகளை எல்லாம் அறிந்த நீ, என்மீது இரக்கம் கொண்டு என்னை ஏற்றுக் கொண்டாலும் சரி! நிராகரித்தாலும் சரி! அது உன் இஷ்டத்தைப் பொறுத்தது." இப்னஸியாத் கூறினான்.

"நீங்கள் செய்த உதவிக்கு என் ஆழ்ந்த ஆயிர நன்றிகள்." முறுவலித்தபடி சொன்னாள் பதருன்னிஸா. அவள் கூறிய இந்நன்றி இப்னஸியாதுக்கு ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.

"பதர்! உனக்காக, உன் நலனுக்காக, என் உயிரும் தேவைபடுமாயின் நிச்சயமாக—ஏன்? சத்தியமாக அதைத் தியாகம் செய்ய நான் ஒரு கணமும் தயங்கமாட்டேன். இப்போது நீ ரொம்ப களைத்திருக்கிறாய். சற்று நேரம் ஓய்வு எடுத்துக் கொள். பிறகு பேசலாம்!" என்று இதமாக சொல்லி விட்டு வெளியே சென்று விட்டான் இப்னஸியாத்.

அஹ்லபைத்திற்கு எஸீதை விட கொடிய விரோதி இப்னஸியாத் என்பதை பதருன்னிஸா நன்கு அறிந்திருந்தாள். ஆனால் அதே விரோதி பதருன்னிஸாவைக் காப்பாற்றாமல் இருந்தால் இது வரை அவள் மண்ணுக்கு இரையாகி விட்டிருப்பாள். இதன் பயனாக இப்னஸியாத் மீது கொண்டிருந்த பகையை அடியோடு ஒழிக்காவிட்டாலும், ஓரளவு குறைத்துக் கொண்டாள் அவள்.

பதருன்னிஸா, இப்னஸியாத் இல்லத்திற்கு வந்து வாரங்கள் சில சென்று விட்டன.

பதருன்னிஸா இப்னஸியாதிடம் இதமாக அன் பொழுக பேசி வந்தாள். இதனால் இப்னஸியாத் எல்லையில்லா மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தான். இவ்வளவு குறுகிய காலத்தில் பதருன்னிஸா வின் மனதில் தனக்கு இவ்வளவு நிரந்தரமான இடம் கிடைக்கும் என்று அவன் கொஞ்சங் கூட எதிர்பார்க்க வில்லை. அவர்களுக் கிடையே இப்போது கல்யாண வாக்குறுதியும் ஏற்பட்டு விட்டது. இப்னஸியாத் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண் டிருந்தான். சில நாட்களில் அவன் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் அவனைத் தேடியே வந்து விட்டது. ஆகவே அந்த சந்தோஷ சமாசாரத்தை சொல்ல இப்னஸியாத் சிரித்துக் கொண்டே பதருன் னிஸாயிடம் வந்தான்.

"உங்களை எதிர்பார்த்து பார்த்து நான் தினமும் களைத்தும் சலித்தும் விடுகிறேன். இன்னும் எத்தனை நாளுக்கு நான் இப் படியே கன்னியாகவே அதுவும் கைதியாக இருக்க வேண்டும்? இனி என் ஆசைகளை எல்லாம் அமுக்கி என் பருவத்தை பாழாக்கிக் கொள்ள முடியாது. இப்போதே இதற்கு ஒரு முடிவு வேண்டும்." இப்னஸியாத் எதுவும் பேசுவதற்கு முன்பே பதருன்னிஸா பொய் கோபத்தோடு காதல் வார்த்தைகளால் கட்டி அடித்தாள்.

"கோபிக்காதே பதர். உனக்கு மட்டுமா அந்த ஆசை இருக் கிறது? எனக்கில்லையா? நான் எதிர்பார்த்த சந்தர்ப்பம் இப்போது தான் கிடைத்து இருக்கிறது. நாம் கல்யாண சம்பதிகளாகி குதூகல குளத்தில் கும்மாளமடிக்கும் தருணம் வந்து விட்டது. உனக்காக நான் எஸீதிட மிருந்தும், இத்தலை நகரத்தில் இருந்தும் வெகு தூரத்தில் இருக்க வேண்டு மென்ற திட்டத்தில் சமயம் பார்த்து எஸிதிடம் அனுமதி பெறலாம் என்று இருந்தேன். ஆண்டவன் அருளாலும் உன் அன்பின் பயனாகவும் இன்று எஸீதே என்னை அழைத்து 'கூபா' வுக்குப் போய் கவர்னராக இருக்கும்படி ஆணையிட்டு விட்டான்." தன் பற்கள் அனைத்தும் காட்டியபடி பகர்ந்தான் இப்னஸியாத்.

"நீங்கள் சொல்வது உண்மையாயின் இங்கிருந்து நாம் எப் போது புறப்பட வேண்டும்?" பதருன்னிஸா கேட்டாள்.

"நாளை காலை 'பஜர் நமாஸ்' முடிந்ததும் புறப்பட வேண்டியது தான். கூபாவுக்கு சென்றதும்......"

"நம் கல்யாணம் கோலாகலமாக நடக்கும், அதுதானே!"

"ஆம்! நான் நினைத்ததை அப்படியே சொல்லி விட்டாய்."

"அது சரி! இவ்விஷயம் எஸீதுக்குத் தெரிந்து விட்டால்?"

"அது முடியாத காரியம். இருந்தும் உன் பெயரை மட்டும் மாற்றிக் கொள்ள வேண்டும். ஆட்சேபனை இல்லையே!"

"பெயர் மட்டுமென்ன! பருவத்தையே வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளுகிறேன். முதலில் இங்கிருந்து புறப்பட்டு விட்டால் தேவலை."

"அதுதான் சொல்லி விட்டேனே நாளைகாலை என்று!" இப்னஸியாத் இதைச் சொல்லி விட்டு, பிரயாண ஏற்பாட்டில் ஈடு பட்டு விட்டான்.

கூபாவுக்குப் போகுமுன் இப்னஸியாதின் எண்ண அலைகள் கூபாவின் கரையைத் தொட்டு விட்டது.

'பதருன்னிஸாவுக்கும் இப்னஸியாதிற்கும் அங்கு கோலாகலமாகக் கல்யாணம் நடக்கிறது. முதல் இரவில் பதருன்னிஸா வெட்கி ஒரு மூலையில் நிற்கிறாள். இப்னஸியாத் அவளைக் கட்டி அணைத்து முத்தமாரிகளைப் பொழிகிறான்!'

இவ்விதமான இன்ப எண்ணத்திற் கிடையே பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களை எல்லாம் வரிசை கிரமமாக அடுக்கி வைக்கும்படி தன் ஆட்களுக்கு அதிகார ஆக்ஞை பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

காலை பஜர் நமாஸுக்குப் பின்—இப்னஸியாத், பதருன்னிஸா மற்றும் சில வீரர்கள் அடங்கிய அச்சிறு கோஷ்டி கூட்டம் கூபாவை நோக்கி புறப்பட்டு விட்டது. திரையால் மூடப்பட்ட 'மஹமில்' என்னும் பல்லக்கில் பதருன்னிஸா வீற்றிருந்தாள். 'வேர்' என்ற சிறு கிராமத்தை இக்கூட்டம் அடைவதற்கும் 'தன் கடமை தீர்ந்தது' என்ற தோரணையில் கதிரவன் மறைவதற்கும் சரியாக இருந்தது. அன்று அமாவாசை யானதால் கடல் போல மணற் நிறம்பியுள்ள அப்பாலைவன பிரதேசத்தில் இருளரசன் இறுமாப்புடன் தன் ஆட்சியைத் தொடங்கினான். கூபாவுக்குச் செல்லும் இக் கூட்டம் இரவு பொழுதைக் கழிக்க அக்கிராமத்திலே முகாம் போட்டு விட்டது. பயங்கரமான அந்த இரவில் ஓரிரு வீரர்கள் பேசிக் கொள்வதால் மனித சஞ்சாரத்திற்கு அத்தாட்சி கிடைத்துக் கொண்டிருந்தது. இல்லாவிட்டால் பாலைவனத்திலுள்ள அச்சிறு கிராமம் பேய்கள் வாழும் 'மயானம்' என்றே கருத வேண்டியிருந்தது.

பல இன்பக்கனவுகளைக் கண்டபடி இப்னஸியாத் ஆழ்ந்த நித்திரை கொண்டிருந்தான். ஆனால் பதருன்னிஸா மட்டும் தூங்காமல் நள்ளிரவான அந்நேரத்தில் இப்னஸியாதுக்கு ஒரு நிருபம் தீட்டிக் கொண்டிருந்தாள்.

(தொடரும்)

(மே—1961)

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

நமது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக் குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேத மாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமா யுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனை களையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஃது திருக்குர் ஆனின் **தப்ஸீரை தமிழ் பாஷையில் ஸுன்னத்து வல் ஜமாஅத்தின்** உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப் பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழ காக எழுதி போட்டோபிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங் களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம்:** ஸூறத்து பாத்திஹா—பகருவி லிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¼ ஜுஸு வரை விலை ரூ. 10

**இரண்டாம் பாகம்:** ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய விலை ரூ. 10

**மூன்றாம் பாகம்:** ஸூரே யூனுஸ் முதல் ஸூறத்துக் கஹ்ல் முடிய 7-ஸூருக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூறத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**ஐந்தாம் பாகம்:** ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். விலை ரூ. 12

**ஆறாம் பாகம்:** ஸூறத்து ஸாப்பாத் முதல் ஸூறத்து ஹுஜ்ராத் முடிய 13-ஸூராக்கள். விலை ரூ 12

**ஏழாம் பாகம்:** சூறே காப் முதல் ஸூறத்து நாஸ் வரை 41-ஸூருக்கள் விலை ரூ. 16

---

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

(68-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## நேர்வழிக்கு வராதவர், வரார்!

(நபியே,) அந்தக் காபிர்கள் எப்படிப்பட்டவர்க ளெனின்: நீர் அவர்களுக்கு எச்சரிக்கை செய்து நற்போதனை புரிந்தாலும் சரி புரியாவிட்டாலும் சரி, அவர்கள் ஒரு போதும் நேர்வழிக்கு வரவே மாட்டார்கள். (நபியே) அவர்களுடைய ஹிருதயங்களின் மீதும் அவர்களின் காதுகளின் மீதும் அல்லாஹ் (தஆலா அஞ்ஞானம் என்னும்) முத்திரையைப் போட்டு மூடி விட்டான். மேலும் அவர்களுடைய கண்களின் மீதும் (அஞ்ஞானத்) திரை விழுந்து போய் கிடக்கிறது. எனவே, மறுமையில் அவர்களுக்கு கடுமையான வேதனை உண்டாய் இருக்கிறது.

(ஜுஸு: அலிப்லாம்மீம்; ஸூரா: அல்பகரா; ருகூ: 2)

## பாபிகள் மீது சதா, சாபம் உண்டாகும்.

(அல்லாஹ்வையும் இஸ்லாமையும்) நிராகரித்து விட்ட பாபிகள் மீது, அல்லாஹ்வுடையவும், (தேவ) மலக்குகளுடையவும், இன்னும் (லோகத்திலுள்ள) சகல ஜனங்களுடையவும் 'லஃனத்' (என்னும் சாபம்) உண்டாகிக் கொண்டே இருக்கும்; எனவே அவர்கள் சதா காலமும் சாபக் கேட்டிலேயே வீழ்ந்து கிடப்பர். மறுமையில் அவர்களுக் குரிய வேதனை (தண்டனை) கொஞ்சமும் குறைய மாட்டாது; அவர்களுக்கு (தப்புவதற்கு) சந்தர்ப்பமும் அளிக்கப்பட மாட்டாது.

(ஜுஸு: ஸயகூலு; ஸூரா: அல்பகரா; ருகூ: 19)

## விரோதிகளை எதிர்த்துப் போரிடுங்கள்

(ஏ முஸ்லிம்களே,) ஈமான் கொண்டவர்களே, (உங்களுக்குத் தீங்கு செய்த) உங்கள் எதிரிகளை எதிர்த்து அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் போரிடுங்கள். ஆனால், இச்செயலில், வரம்பைக் கடந்து போய் விடாதீர்கள். ஏனெனின் வரம்பைக் கடந்து போகிறவர்களை (எதிரிகளிடமும் அதிக்கிரமமாக நடந்து கொள்பவர்களை) அல்லாஹ் (தஆலா) விரும்புவது கிடையாது. எனவே, உங்கள் ஆட்களைக் கொன்றவர்கள் நீங்கள் எங்கு கண்டபோதிலும்

(பதிலுக்குப் பதில்) கொன்று போடுங்கள். உங்களை அவர்கள் எங்கிருந்து விரட்டித் துரத்தினார்களோ, அவர்களை நீங்களும் அவ் விடத்தை விட்டும் வெளியேற்றித் துரத்திவிடுங்கள். ஏனெனின், (அவர்களை அங்ஙனமே) விட்டு வைத்தால், (அமிதமாய்) விஷமம் (கலகம்) செய்து கொண்டு திரிவார்கள். அங்ஙனம் கலகம் செய்வதும் ஒரு வகையில் கொலைச் செயலேயாகும்; (அதை விடக் கடுமையும் ஆகும்.) (இக்கட்டளை, பண்டைக் காலத்தில் காபிர்கள், முஸ்லிம்களிடம் கொடுங் கோன்மையாய் நடந்து கொண்டு, பிறகு இஸ்லாத்துக்கு வெற்றி ஏற்பட்டு முஸ்லிம் களுக்கு நல்லாதிக்கம் ஏற்பட்ட சம்பவத்தை யொட்டியவை யாகும்.)

மேலும் அப்படிப்பட்டவர்கள், பரிசுத்த கஃபா எல்லை யாகிய மஸ்ஜிதுல் ஹராமுக்குள் அகப்பட்டுக் கொண்டால், அங்கு (இவர்களுடன் வாள் யுத்தம் செய்யாதீர்கள்.) அவர்களைக் கொல் லாதீர்கள். அங்கும் அவர்கள், உங்கள் சகிப்புத் தன்மையை எதிர்த்து உங்களைக் கொல்ல வந்தால், அப்போது நீங்கள் அவர்களை எதிர்த்துக் கொன்று போடலாம். இதுதான் (கொடிய வர்களான) காபிர்களுக்குரிய தண்டனை யாகும். அங்ஙனம் அவர்கள் உங்களை அங்கு எதிர்ப்பதை விட்டும் பேணிக் கொண்டால், (நீங்கள் அவர்களை மன்னித்து விடுங்கள்.) அல்லாஹ் (தஆலா) வும், மிகமிக மன்னிக்கக்கூடியவனாக இருக்கின்றான்.

இன்னும் அக்காபிர்கள் (விரோதிகள்) நாட்டில் கலகம் செய்து திரியா திருக்கும் வரை, அவர்களை எதிர்த்துப் போரிடுங்கள்; அல்லாஹ் உடைய சன்மார்க்கத்தை (இத்தரணியில்) நிலை நிறுத்தி வையுங்கள். அங்ஙனம் அவர்கள் பணிந்து (இஸ்லாத்தின் பக்கம்) நெருங்கி வந்தால், அக்கிரமக்காரர்களைத் தவிர வேறு எவர் மீதும் அதிக்ரமம் (ஹிம்சை) செய்யக் கூடாது.

(இதுவும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், திருமக்காவை வெற்றி கொண்டு, கைப்பற்றிய காலத்துச் சம்பவத்தை யொட்டிய கட்டளையே யாகும். எனினும், பொதுப்படையாக இஸ்லாமிய தர்மப் போர் என்னும் ஜிஹாதின் கட்டளை யாதெனின்: நம் முஸ்லிம்களையும் இஸ்லாமிய தர்மத்தையும் எதிர்த்து அக்கிரமம் செய்பவர்களை, நாமும் எதிர்த்துப் போரிட்டுக் கொன்றொழிக்க வேண்டும் என்பதேயாகும். அக்கிரமம் செய்யாத, நல்ல மனிதர் களை, அவர்கள் காபிரானாலும் யாரானாலும் சரியே, இன்னும் புனித ஸ்தலங்களான பள்ளி வாசல் முதலிய நல்ல இடங்களில், எக்காரணத்தை முன்னிட்டும் கலகம் விளைவிப்பதோ, இரத்தம் சிந்துவதோ கூடாது; ஆனால் அங்கும் எவனேனும் அக்கிரம மாகப் புகுந்து முஸ்லிம்களைக் கொல்லத் துணிந்தால், அப்படிப்

பட்டவனுடைய கொட்டத்தை அடக்கக் கொன்று போடுவது ஜாயிஸ் ஆகும்.)

(ஜுஸுஉ: ஸயகூலு; ஸூரா: அல்பகரா; ருகூ 24)

## காபிர்களுக்கு உலகில் மட்டுமே சுகம்

காபிர்கள் உலகத்தில் (செல்வத்தையும் சுகபோகத்தையும்) அடைய விளைந்து கொண்டிருக்கிறார்கள். (மேலும் அவர்கள், தமக்குக் கிடைத்த செல்வத்தைக் கொண்டு) அகங்காரம் கொண்டு (அட்டூழியம்) புரிந்து கொண்டு திரிகிறார்கள். (எனவே காபிர்களுக்கு உலக வாழ்வில் மட்டும் தான்) சுகம் உண்டு. ஆனால், (ஈமான் கொண்டு, அல்லாஹ்வுக்குப் பயந்து) சன்மார்க்கத்தைப் பேணி நடந்து கொள்பவர்களுக்கு, மறுமையில் அக்காபிர்களை விட அதிகமான மதிப்பும் பேரானந்தமும் உண்டு. அல்லாஹு (தஆலா) யாருக்கு நாடுகின்றானோ அவர்களுக்கு, கணக்கில்லாமல் (அபரிமிதமான செல்வத்தை) ரிஸ்கை கொடுத்தருள் புரிகிறான்.

(ஜுஸுஉ: ஸயகூலு; ஸூரா: அல்பகரா; ருகூ: 26)

## விரோதிகளை நம்பி நட்பு கொள்ளாதீர்கள்.

முஸ்லிம்களுடைய கடமை யாதெனின்: இவர்கள் (தம் போன்ற முஸ்லிம் சகோதரர்களை விட்டு) காபிர்களை நம்பி அவர்களுடன் நட்புறவு கொள்ளக் கூடாது யாரேனு மொருவர், இக் கட்டளைக்கு மாறாக நடந்து கொள்வாரானால், அதனால் நேரிடும் தீங்குக்கு அல்லாஹ் (தஆலா) பொறுப்பாளனாக மாட்டான். எனினும் (சில சந்தர்ப்பங்களில்) அந்தக் காபிர்களுடைய மிகைப்பான தீங்குகளை விட்டும் தற்காத்துக் கொள்வதற்காக, தற்காலிகமான (போலி) நட்பு கொள்ளவேண்டி யிருந்தால், இப்படிச் செய்து கொள்வதில் பாதக மொன்று மில்லை. எனவே, அல்லாஹு தஆலா, உங்களைத் தன் மகாத்மியத்தைக்கொண்டு எச்சரிக்கை செய்கின்றான். இறுதியில் நீங்கள் எல்லோரும் அல்லாஹ் இடம் போய்ச் சேர வேண்டியவர்களாகவே இருக்கிறீர்கள்.

(ஜுஸுஉ: திர்க்ருஸுலு; ஸூரா: ஆல இம்ரான்; ருகூ 3)

## காபிர்களின் மனதில் முஸ்லிம்களின் பயம்

(முஸ்லிம்களே,) ஈமான் கொண்டவர்களே, (நீங்கள் நேர்மை தவறாமல் நடந்து கொள்வீர்களாயின், இறைவனாகிய) யாம், அக்காபிர்களுடைய உள்ளங்களிலே உங்களைப் பற்றிய பயத்தை உண்டாக்கி வைப்போம். ஏனெனின் அவர்கள், (உண்மை யற்றதும்) பொய்யானது மான வஸ்துக்களை தெய்வமென்று நம்பி, ஷிர்க்கான காரியம் செய்து உழல்பவர்களா யிருக்

கிறார்கள். இதைப் பற்றி அவர்களிடம் சத்திய ஆதாரம் கிடையாது. எனவே இறுதியில் அவர்களுக்குரிய போக்கிடம் நரகமே யாகும். அக்கிரமக் காரர்களுக் கேற்ற உறைவிடமான நரகம், மகாக் கொடியதே யாகும்.

(ஜுஸுஉ: லன்தனு; ஸூரா: ஆலஇம்ரான், ருகூ: 16)

## காபிர்களின் தீங்கை விட்டும் தப்புங்கள்.

(முஸ்லிம்களே,) நீங்கள், எங்கேனும் யாத்திரை போய்க் கொண்டிருக்கும் போது, அங்கு காபிர்களால் (இஸ்லாமிய விரோதிகளால்) உங்களுக்குத் தீங்கு நேரிடு மென்றிருந்தால், (சகல விதத்திலும்) தப்பித்துக் கொள்ளுங்கள். நீங்கள் அங்குத் தொழுது கொண்டிருக்கும் போது (திடீர் தாக்குதல் போன்ற) அச்சம் இருந்தால், தொழுகைகளையும் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள். (அதாவது நெருக்கடியான, ஆபத்தான காலத்தில் அவ்வேளையின் பர்லை மட்டும் தொழுது கொண்டு, நபில்—சுன்னத்துகளை விட்டு வைக்கலாம்.) இப்படிச் செய்வது உங்களுக்கு பாபச் செயலாக மாட்டாது. (எச்சமயத்தில் எதிரிகளான காபிர்களை நம்பி அஜாக்ரதையாக இருந்து விடாதீர்கள்.) ஏனெனின் அவர்கள், உங்களுக்குப் பகிரங்கமான விரோதிகளே யாவர்.

(ஜுஸுஉ: வல்முஹ்ஸினுத், ஸூரா: அந்நிஸா; ருகூ: 15)

## பாபிகளுக்கு மறுமையில் சிபாரிஷ் கிடையாது.

ஈமான் கொண்டவர்களே, (முஸ்லிம்களே,) நீங்கள் முஸ்லிம் (சகோதரர்) களுடைய கூட்டுறவை விட்டுக் காபிர்களுடைய கூட்டுறவை (பெரி தென எண்ணி) ஏற்றுக் கொண்டு விடாதீர்கள்; இப்படிச் செய்தால் நீங்கள் அல்லாஹ்வுக்கு மாறு செய்து, பகிரங்கமான பழியை தம்மீது ஏற்றுக் கொண்டவர்களாவீர்கள். இறுதியில், நயவஞ்சர்களான (காபிரான) அவர்களும் நரகத்தின் அடிப்பாதாளத்தில் தான் கிடந்து உழல்வார்கள். (மறுமையாகிய) கியாமத்தில் (அந்தப்) பாபிகளுக்கு எவருடைய (உதவியும்) சிபாரிஷும் கிடைக்க மாட்டாது.

(கியாமத்து நாளில், நபிமார்களும் றஸூல் மார்களும், தங்கள் உம்மத்தாகிய சத்தியக் கூட்டத்தார்களுக்கு மட்டும் தான் சிபாரிஷ் செய்து, இறைவனிடம் உதவி கோருவார்கள். பாபிகளான காபிர்களுக்கும் முஷ்ரிக்குகளுக்கும், எந்த நபியும் சிபாரிஷ் செய்ய மாட்டார்கள்; முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய ஷபாஅத்து முஸ்லிம்களுக்கு மட்டுமே கிடைக்கும்.)

(ஜுஸுஉ: வல்முஹ்ஸினுத்; ஸூரா: அந்நிஸா; ருகூ: 21)

# ஹஜ்ரத் 'க்வாஜா' முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் ஜீவிய சரிதை.

(டி. எப். ரஹ்மத்துல்லாஹ்—மஆலி சாஹிப் (பாகவி)

## 15-ம் பாகம்

### புண்ணியம் பெற்ற அஜ்மீர்

ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்த்தி (ரஹ்) அவர்கள், விஜயம் செய்ததால் அஜ்மீர் என்னும் ஊர் புண்ணியம் பெற்ற நகரமாய் விட்டது.

நம் க்வாஜா சாஹிப் அவர்கள், அஜ்மீருக்கு விஜயம் செய்த போது, அவர்களுடன் நம்பிக்கை வாய்ந்த சில முரீதின்களும், கல்ஹாழியர்—காதிம்களும் ஒரு குழுவாக (ஜ'மாஅத்தாக) இருந்தார்கள்.

ஹஜ்ரத் அவர்கள், தமது திருக் கூட்டமாகிய இந்த ஜமா அத்துடன், பொட்டல் காடான ஒரு மைதானத்தில், 'நிழல் தந்து கொண்டிருந்த ஒரு மரத்தடியில் முதன் முதலாக வந்து அமர்ந்தார்கள்.

அந்த இடமானது, அஜ்மீர் மன்னரான ராய்பத்தூரா எனப் படும் பிரித்விராஜ் உடைய ஒட்டகங்கள் மேய்ந்து விட்டு இளைப்பாறுவதற்கு தினமும் வந்து கூடும் ஒரு மேய்ச்சல் திடலை யடுத்த ஓர் இடம் என்று சொல்லப்படுகிறது.

### ஒரு சிறு எதிர்ப்பு

அங்ஙனம் ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்கள், தம் சகாக் களுடன மரத்தடியில் வந்து உட்கார்ந்து கொண்டதை, ராஜா வுடைய ஒட்டக மோட்டிகளான காவலர்கள் கண்டார்கள். எனவே, அருகில் வந்து, "ஏ, பக்கீர்களே, இங்கு உட்காராதீர்கள். இது இவ்வூர் ராஜாவுடைய ஒட்டகங்கள் அசை போடுவதற்கு உட் கார்ந்து இளைப்பாறும் இடமாகும். எழுந்து போங்கள்" என்று சொல்லி எதிர்த்தார்கள்.

இதைக் கேட்டு, க்ரீப் நவாஜ் க்வாஜா முஈனுத்தீன் (ரஹ்) அவர்கள், அவர்களையும் அவர்கள் பேச்சையும் பார்த்து சிரித்து விட்டுச் சொன்னார்கள்:—"அப்பா, உங்கள் ஒட்டகங்கள் உட்கார்ந்து இளைப்பாறுவதற்கு இப்பரந்த மைதானத்தில் இன்னும் ஏராளமான இடம் இருக்கிறதே! நாங்கள் மனிதர்கள்; மிருகங்களைவிட எங்

களுக்கு முதலிடம் தரவேண்டாமா? வேண்டுமானல் எங்களுக்குப் பக்கத்திலேயே சற்றுதள்ளி உங்கள் ஒட்டகங்கள் வந்து அமரட்டுமே; நாங்கள் சற்று நேரம் இங்கு தாமதிப்பதால் உங்களுக்கொன்றும் நஷ்டம் ஏற்பட்டுவிடாதே" என்ருர்கள்.

எப்போதுமே, ராஜாவின் ஆட்களான அதிகாரிகளுக்கு மமதையும் அகங்காரமும் உண்டு. பக்கீர்கள், பரதேசிகள் தங்கள் பேச்சுக்கு எதிர்ப் பேச்சு பேசுவதா என்று அகங்காரம் கொண்டார்கள். அதுவும் முஷ்ரிக் ராஜாவுடைய முஷ்ரிக்கான பேர்வழிகளாயிற்றே, முஸ்லிம்களைக் கண்டால் கொஞ்சம் அழுக்காறும் இருக்கத்தானே செய்யும்?

"ஏ பக்கீர்களே, நீங்கள் இங்குத் தங்கக் கூடாது; அப்படி வேறெங்காவது போய்த் தங்குங்கள். இங்கு உங்களுக்கு இடம் இல்லை, போங்கள்" என்று கொஞ்சம் கண்டிப்பாகவும் கடுமையாகவும் கூறினர்கள் காவலர்கள்

நம் ஹஜ்ரத் காஜா சாஹிப் அவர்கள், அந்த அற்ப குணம் படைத்தவர்களுடன் அதிகம் வாயாட விரும்பவில்லை. மேலும் முஸ்லிம்களின் பெருந்தன்மையும் சகிப்புத்தன்மையும் அவர்களுக்குத் தெரிய வேண்டுமல்லவா? எனவே, பெருமனம் கொண்டு, அந்த மரத்தடியை விட்டகன்று, சற்று தூரம் போய், "அன்னசாகர்" எனப்படும் ஓர் ஏரிக் கரையில் தங்கினர்கள்.

## அவ்லியா மஸ்ஜித்.

தற்போது, அஜ்மீர் ஷரீபிலுள்ள மாப் பெரும் விஸ்தீரமான இடம் கொண்ட தர்க்கா ஷரீபில், அவ்லியா மஸ்ஜித் என்று ஒரு மேடான பாகம் இருக்கிறது. இதுதான், முதன் முதலாக ஹஜ்ரத் அவர்கள் வந்து உட்கார்ந்த மரத்தடி மைதானம் என்று, சரித்திர ஆராய்ச்சிக் காரர்கள் சொல்கிருர்கள்.

அல்லாஹ் உடைய நல்லடியார்களான ஒலிமார்களுக்கு 'இன்ன இடம்தான்' சொந்த இடம் என்று கிடையாது. எங்கெங்கு ஞானபோதனை புரிவதற்காக அமர்ந்து கொள்கிருர்களோ, அதெல்லாம் அவர்களுக்குரிய ஸ்தலம்தான். அல்லாஹு தஆலாவுடைய சட்டளைப்படி தானே, அவ்லியாமார்கள் எந்தக் காரியத்தையும் செய்கிருர்கள்?

## முதலாவது கராமத்து

மேற்கூறிய சம்பவம் ஈங்கு மீண்டும் குறிப்பிடத்தக்கதாகும். ஒட்டக மோட்டிகளான ராஜாவுடைய அதிகாரிகள், நம் க்வாஜா சாஹிபிடம் கடுமையான பேச்சு பேசி, எழுந்து போகும்படி நிர்ப்பந்தித்த போது, நம் க்வாஜா சாஹிப் அதிகமாக எதும்

சொல்லாமல், அவர்கள் சொன்ன சொல்லையே திரும்பச் சொன்னார்கள். அதாவது:

“ஆமாம்! இது உங்கள் ராஜாவுடைய மிருகங்கள் (ஒட்டகங்கள்) உட்காருவதற்குரிய இடமே தான். இங்கு இனி நாங்கள் (மனிதர்கள்) உட்கார இஷ்டப்படவில்லை.”

இதை யொட்டி, ஹஜ்ரத் அவர்களுடைய முதலாவது ‘கராமத்’ நிகழ்ந்தது. அதாவது, வெய்யில் தாழ்ந்து மாலை நேரம் நெருங்கியபோது, ராஜா உடைய ஒட்டகங்கள் மேய்ந்து விட்டு வழக்கம் போல் உட்கார்ந்து அசைபோடுவதற்கு அங்கு வந்து சேர்ந்தன. அப்படி வந்து உட்கார்ந்த ஒட்டகங்கள் (மிருகங்கள்) அப்படியே உட்கார்ந்த வண்ணமே இருந்து விட்டன. மறுபடியும் அவ்விடத்தை விட்டு எழுந்திருக்கவே இல்லை. ஒட்டக மோட்டிகளான ரஜாவின் ஆட்கள் எம்மட்டோ மிரட்டியும் எழுப்பியும் அவ்வொட்டகங்கள் அசையவில்லை.

எனவே, இது அந்த சாதுப் பக்கீர் சாஹிபுடைய ‘சாபமாக’ இருக்கலாம் என்று அஞ்சினார்கள் காவலாளிகள். உடனே அவர்கள், சற்று தூரத்தில் அன்னசாகர் எரிக்கரையில் தங்கி யிருக்கும் நம் மகான் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தீ (ரஹ்) அவர்கள் சமூகத்தில் வந்து, “பெரியவரே, நாங்கள் உங்கள் மகிமை தெரியாமல் கடுமையாகப் பேசி, உங்கள் மனதை உறுத்தி விட்டோம். மன்னித்து விடுங்கள்” என்று வேண்டிக் கொண்டனர்.

“சரி, போங்கள். எந்த எஜமானனுடைய கட்டளைப்படி அம்மிருகங்கள் உட்கார்ந்து கொண்டனவோ, அந்த எஜமானனுடைய கட்டளைப்படியே அவை எழுந்து கொள்ளும், போங்கள்” என்று சொல்லி அனுப்பினார்கள்.

ஹஜ்ரத், இவ்வாறு சொல்லி முடிந்ததும், ஒட்டகங்கள் எழுந்து போகத் தொடங்கி விட்டன.

## இரண்டாவது கராமத்து.

அன்ன சாகர் என்ற எரிக்கரையில் அப்போது, ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களும், பக்கீர்ஜமாஅத்தாரும் தங்கினார்களே அந்த இடம், ஹஜ்ரத் அவர்களுக்கு மிகவும் திருப்தி யளித்து விட்டது.

அந்த இடத்துக்கு சற்று அருகில் நாலாபக்கமும் பல கோயில்கள், மந்திர்கள் இருந்தன. அந்தக் கோயில்களில் ஒரு பிரதான கோயிலும் மிக கம்பீரமாய் அழகான தோற்றத்தில் காணப்பட்டது. இது, அக்கால அஜ்மீர் ராஜாவும் மந்திரிப் பிரதானிகளும் ஆடம்பரத்தோடு வந்து பூஜை புனஸ்காரம் செய்து விட்டுப் போகும் ஸ்தலமாக விளங்கி வந்தது.

இந்தக் குறிப்பிட்ட கோயிலுக்காக, ராஜா, அநேக சொத்துக்களையும் ஊர்களையும் தர்ம சொத்தாக விட்டு வைத்திருந்தார். இந்தக் கோயிலில், அக்காட்களில் இரவு காலங்களில் தினமும் தீபாலங்காரம் நடைபெறும். இதற்கு, முன்னூறு வீசை எண்ணெய் செலவாகுமாம். அநேக பூஜாரிகளும், ஊழியர்களும், காவலர்களும் அங்கு இருந்து வந்தனராம்.

அந்தக் கோயிலில் இருந்த ஒரு விக்கிரகத்துக்கு, அன்னு (அன்னை) என்று பெயராம். ஆகையால் தான் அந்த இடத்துக்கே 'அன்னுசாகர்' என்று பெயர் வந்ததாம்.

இப்படிப் பட்ட புனிதஸ்தலமான தங்கள் கோயிலுக்குப் பக்கத்தில், சில முஸ்லிம் பக்கீர் கோஷ்டி வந்து முகாம் போட்டுக் கொண்டிருப்பது, சில கோயில் பூசாரிகளுக்குப் பிடிக்கவில்லை; எனவே அவர்கள், தங்கள் ராஜாவுடைய தர்பாருக்குப் போய் முறை யிட்டுக் கொண்டார்கள்.

"யாரோ முஸ்லிம் பரதேசிகளான சில பக்கீர்கள், நமது அன்னுசாகர் கோயிலுக்குப் பக்கத்தில் ஓர் இடத்தில் முகாம் போட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் காலையும் மாலையும் இதர நேரங்களில் "அல்லாஹு அக்பர்" என்று கூப்பாடு போட்டு 'பாங்கு' சொல்கிறார்கள். வரிசையாய் நின்று ஏதோ ஓதி ஓதித் தொழுகை (நமாஸ்) நடத்துகிறார்கள்; இதனால் நமது ஸ்வாமிகளுக்குப் பங்கம் ஏற்படுகிறது. கோயில் காரியங்கள் கெட்டுப் போகின்றன" என்று சொல்லிக் கொண்டனர்.

ராஜாவோ, முன்பின் யோசிக்காமல் உத்தரவு போட்டு விட்டார். "உடனே அந்த பக்கீர் கோஷ்டிகளை அவ்விடத்தை விட்டு அகற்றுங்கள், வெளியேற்றுங்கள்" என்று ஆக்ஞை பிறப்பித்து விட்டார்.

ஊரெல்லாம் இதே பேச்சு பரவியது. அதிகாரிகள், பூசாரிகள், பொதுஜனங்கள் பெருங் கூட்டமாய் கூடி, அன்னுசாகர் நோக்கிப் புறப்பட்டனர்.

அப்போது நமது ஹஜ்ரத் கரீப் நவாஜ் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தீ (ரஹ்) அவர்கள், ஜமாஅத்துடன் தொழுது கொண்டிருந்தார்கள். அவர்கள் மீது கை வைத்தால் ஏதேனும் விபரீதம் நேரிடு மென்று அஞ்சிய அதிகாரிகள், காத்துக் கொண்டிருந்தனர். முன்னர் ஒட்டகம் எழுந்திராமல் போன சம்பவம் ஞாபகம் வந்தது அவர்களுக்கு.

தொழுகை முடிந்ததும், ஹஜ்ரத் அவர்கள் திரும்பிப்பார்த்தார்கள். காபிர்கள் கூட்டம் தங்களை எதிர்த்து நெருங்கி வருவதைக் கண்டு, "ஆயத்துல் குர்ஸி" ஓதி ஒரு பிடி மண்ணை அள்ளி வீசி எறிந்தார்கள். கூட்டத்தினர் எல்லோரும் கண் தெரியாமல் இருட்டில் தடமாடுவதைப் போல் திகைத்துத் திண்டாடி

னார்கள். பெரிய பூசாரிகள் கால் கைகள் நடுங்கி சோர்ந்து கீழே விழுந்து விட்டார்கள். இச்சம்பவம், அந்த முஸ்லிம் சாதுவின் மகிமை தான் என்பதை உணர்ந்து கொண்ட பெரிய பூசாரி, நல்லறிவு பெற்று, ஹஜ்ரத் அவர்களிடம் வந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

அது மட்டுமல்ல. அந்த பூசாரி, நம் க்வாஜா சாஹிபிடம் ஞானம் பெற்று கலிமா சொல்லி, இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டார். அவருக்கு இஸ்லாமியப் பெயரும் வைக்கப்பட்டது. இது இரண்டாவது கராமத்து.

(தொடரும்)

---

# முன்னேற்றம் காண்பாய்

[வேளாங்கண்ணி ஏ. எம். இபுருஹீம்]

(1) முன்னோரின் வாழ்வை நீ எண்ணிப்பார்
மூல இஸ்லாத்தின் கொள்கையைப்பார்
முறையோடு வாழ்ந்த அந்நாளைப்பார்
முன்னேற்றம் காண்பாய் இந்நாளிலும் நீ
(2) அன்பான உன் வாழ்வை நீ எண்ணிப்பார்
அறிவின்றி தவிப்பதை நீ யுணர்ந்துபார்
நல்லோரின் ஏழ்மை வாழ்வை அறிந்துபார்
நல்வாழ்கை நடத்துவாய் இந்நாளிலும் நீ
(3) அடுத்த வரை கெடுப்பது பெரும் பாபம்பார்
அண்ணல் நபியின் பொன் மொழியை கடைபிடித்துப்பார்
கடமை யுணர்ச்சியோடு நீ வாழ்ந்துபார்
கண்ணியமாய் வாழ்வாய் இந்நாளிலும் நீ
(4) திருமறையின் கருத்தை தெளிவுற்றுப்பார்
தினம் ஐந்து வேளையை அனுசரித்துப்பார்
அதிபர் நபி இன்புற நீ வாழ்ந்துபார்
அவனியிலே இன்பமடைவாய் இந்நாளிலும் நீ
(5) கருணையுள்ளம் படைத்து வாழ்வை நாட்டிப்பார்
கனிவான தீன் வழிகளை நீ யுணர்ந்துபார்
இகமதில் புகழ்பெற நீ என்றும் முயன்றுபார்
இறைமறை தெளிவாய் தெரிந்துணர்ந்துபார்
(6) கலிமா களஞ்சியத்தை கருத்திலிட்டுப்பார்
கருத்தூட்டும் நெஞ்சத்திற்கு நீ யுணர்ந்துபார்
காலம் நில்லாது கவனம் கொண்டுபார்
கவலையின்றி முன்னேற்றம் காண்பாய் என்றும் நீ

# நஸ்ஹுல் ஹதீது, வபத்ஹுல் மஜீத்

புதிய இரண்டாம் பதிப்பு

இவ்வுலகில் இன்ஸானகப் பிறந்த ஒவ்வொருவரும், சிருஷ்டிக்கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவை அறிந்து ஹகீகத்தை உணர்ந்து இபாதத்து செய்ய வேண்டியது அத்தியாவசியக் கடமை. இதற்கு இல்மு, ஒழுக்கம், ஈமான், இஸ்லாம், அமல், ஷரீஅத் முதலிய முஆமலாத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது முதற்பெரும் கடமையாகும்.

இந்த அரிய பெரிய நூலாகிய "நஸ்ஹுல் ஹதீது வபத்ஹுல் மஜீது" என்பது நமது நபிகள் நாயகம் ரஹ்மத்துல்லில் ஆலமீன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளென்னும் திருவாக்கியங்களைக் கொண்டும், ஸஹாபாக்கள், ஒலிமார்கள் ஸாலிஹீன்கள் நாதாக்களுடைய நஸீஹத்துகள், ஹிக்காயத்துகள் முதலிய உபதேச உபமேய ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டும், தீனுல் இஸ்லாத்தின் எல்லா மஸ்அலாக்களையும், விஷயங்களையும் தத்துவங்களையும் எடுத்தோதும் அற்புதமான நூலாகும். இந்த ஒரு கிதாபு மட்டும் கையில் யிருந்து விட்டால் தமிழ் முஸ்லிம்களுக்கு வேறெந்த கிதாபின் தேவையும் இராது. அதாவது இதில் இல்லாத விஷயமே இல்லையென்று சொல்லலாம். இதன் அருமை நேரில் பார்த்தாலே தெரிய வரும்.

இதன் விலை ரூ. 9–60

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ், 5.




# அழகு ராணி-ஹுஸ்ன் ஆரா

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## [3]

நம் இளவரசன் ஹஸன் பாஷா இவ்வரலாற்றைக் கேட்டுப் பேராச்சரிய மடைந்தான். "நான் இம்மாதிரியான அழகுள்ள பேரழகியைப் பற்றி கேள்விப்பட்டதில்லை. அவள் பெயர் தானே ஹுஸ்னு ஆரா. பெயருக்குத் தகுந்த அழகு; அழகுக்குத் தகுந்த சிறப்பு. இந்த அழகிற் சிறந்த இளங் குமரியைத் தேடிக் கொண்டு தானே நானும், தேசாந்திரியாக இங்கு வந்திருக்கிறேன். என்னவானாலும் சரி, நான் இந்த இளவரசி ஹுஸ்ன் ஆராவைத் தான் மணந்து கொண்டு இராணியாக வைத்து வாழ்வேன்; இப்போது இதற்கு வைராக்கியம் மேற் கொள்கிறேன்" என்று இளவரசன் சொன்னதை அந்த சத்திரத்துப் பரிசாரகனும் கேட்டுப் பெரு வியப்பு எய்தினான்.

மேலும் அந்தப் பரிசாரகன் இளவரசனின் துணிவைக் கண்டு, கூறியதாவது:—"ஐயா, இளங் காளையே, நீர் யாரோ எவரோ தெரியவில்லை. இருந்தாலும் உமது முக லக்ஷணத்திலிருந்து நீரும் ஒரு அரசிளங் குமரன் என்பதைத் தெரிந்து கொண்டேன். உம்மைப் போலவே எத்தனையோ தேசத்து இராஜ குமாரர்கள், இதே மாதிரி வைராக்கியத்துடன், ஹுஸ்னு ஆராவை மணக்கும் எண்ணத்தோடு நாடு விட்டு வந்து, ஜெயம் பெற வழி தெரியாமல், அவஸ்தைப் படுகிறார்கள். அதோ தெரிகிற கூடாரங்களெல்லாம், அப்படி வந்து தங்கி விட்ட வேற்று நாட்டு இளவரசர்கள் உடையது தான். கடவுள் கருணை புரிந்து ஏதேனும் உபாயம் செய்தாலல்லாமல், எங்கள் இளவரசியை மணந்து கொள்வது யாராலும் முடியாத காரியம்; இதற்கு முதலாவதாக, மகா ராஜாவாகிய சுல்தானுடைய சம்மதம் வேண்டுமே" என்று விபரம் சொன்னான்.

அதைக் கேட்டு இளவரசன் ஹஸன் பாஷா மனம் தளர்ந்து விடவில்லை. பரிசாரகனை நோக்கி, "நான் ஸ்நானம் செய்வதற்கு வெந்நீர் வைத்துக் கொடு; எனக்கு வேண்டிய சௌகர்யம் செய்து

கொடு; நான் இன்று முதல், என்னுடைய காரியத்தை ஆரம்பிக்கிறேன்'' என்று சொன்னான்.

அப்படியே, ஸ்நானம் செய்வதற்கு வெந்நீர் வைத்துக் கொடுக்கப்பட்டு, வேண்டிய சௌகர்யங்களும் செய்யப்பட்டன.

இளவரசன், குளித்து சுத்தமாகி, தன்னுடைய சுய உடைகளாகிய அரச ஆடையாபரணங்களை யெல்லாம் களைந்து, ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, சாதாரணமாக பக்கீர்கள் (சன்னியாஸிகள்) அணிவது போன்ற காவி உடைகளை உடுத்திக் கொண்டான்.

* * * *

பிறகு இளவரசன் ஹஸன் பாஷா, அழகுராணி ஹுஸ்ன் ஆராவுடைய அரண்மனை மாளிகையை நோக்கிச் சென்றான். அங்கு அரண்மனையைச் சூழ்ந்து நாலா பக்கமும் நூற்றுக்கணக்கான கூடாரங்கள் போடப் பட்டிருந்தன.

“இவை யெல்லாம் என்ன? எதற்காக போடப்பட்டிருக்கின்றன?'' என்று கேட்டறிந்ததில், தெரியவந்ததாவது:– “அழகு ராணி ஹுஸ்ன் ஆராவின் சௌந்தர்ய குண லக்ஷணங்களைக் கேள்வியுற்று, அவள் மீது ஆசை கொண்டு, அவளை எப்படியாவது மணந்து கொள்ள வேண்டு மென்று ஆசைப்பட்டு வந்த தேச தேசங்களின் இராஜ குமாரர்களுடைய கூடாரங்களே இவைகளெல்லாம்; சமய சந்தர்ப்பத்தை நாடி இவர்களெல்லாரும் இங்ஙனம் அழகு ராணியின் தரிசனத்துக்காகவும், சந்திப்புக்காகவும் காத்துக் கிடக்கின்றனர்'' என்பதாகும்.

இதை யெல்லாம் கேட்டு நம் இளவரசன் ஹஸன்பாஷா ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டான்: “இவ்வளவு பேர்களும் ஒரே ஒரு அழகு ராணியை எப்படி கலியாணம் செய்து கொள்ள முடியும்? யாரேனும் ஒரு பாக்கியசாலிக்குத்தான் அவள் கிடைப்பாள். அப்படிப்பட்ட பாக்கியசாலி யாரென்பதை உலகம் அறியத்தான் போகிறது. நாமும் நம்முடைய அதிருஷ்டத்தை கையாண்டு பார்ப்போம்'' என்று முடிவு செய்தான்.

அந்த தேச அரசாங்கத்தில் ஒரு வழக்கம் என்னவென்றால், தினமும் காலையில் 8 மணிக்கு, அரச அவை என்னும் தர்பார் கூடும்; அரசர் வந்து நீதி பரிபாலன விஷயங்களைக் கவனித்து விசாரணை செய்வார். அந்தச் சமயத்தில், அரசருடைய கவனத்தைக் கவர்பவர்தான் அரசரால் கவனிக்கப் படுவார். மற்றபடி. யாரும் முன் அனுமதி யில்லாமல், அரச அவைக்குள் பிரவேசிக்கவோ, அரசருடைய கவனத்தைக் கவரவோ முடியாது. இதை இளவரசன் அறிந்து கொண்டு, ஒரு தந்திரோபாயம் செய்யலானான்.

அதாவது: தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில், அரச சபை கூடி யிருக்கும் சமயத்தில், இளவரசன் ஹஸன் பாஷா, சன்னியாஸி உடையில், பக்கீர் கோலத்தோடு, ஒரு அழகிய குதிரை மீது ஏறி, அதிவிரைவாக அரச சபைக்கு எதிரில், புழுதி எழும்பி, வாயுவேகமாக ஓடிச் செல்வான். இவன் போகும் ஜோரையும் வேகத்தையும் கண்டு சபையோர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்ப்பார்கள். அதற்குள், குதிரை ஓடி மறைந்து விடும். இவ்விதமாக தினமும் தொடர்ந்து பல நாள் செய்து வந்தான்.

இதைக் கண்டு அரசருக்கு ஒரு பக்கம் சினமும் மறுபக்கம் ஆச்சரியமும் ஏற்பட்டது. இந்த மாதிரி, அரச சபைக்கு முன்னால், குறிப்பிட்ட நேரத்தில் கன வேகமாக குதிரை மீது கடிந்து செல்லும் அந்த விநோத வாலிபன் யார்? என்று கேட்டுப்பார்த்தார். குதிரை வீரனைப் பற்றிய விபரம் யாருக்கும் தெரியா தாதலால், யாரும் சரியான பதில் சொல்லவில்லை. எனவே அரசர் ஓர் உத்தரவு போட்டார்.

மந்திரியையும் சேனாதிபதியையும் அழைத்து, “பிரதானிகளே, இந்த மாதிரி ஒருவன் நமக் கெல்லாம் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கி விட்டுச் செல்கிறானே, இவனைப்பற்றி நீங்கள் சிரத்தை எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறீர்களே! சரியா? நாளைக்கு அவன் குறிப்பிட்ட நேரத்தில் குதிரைமீது செல்வான்; அப்போது நம்முடைய குதிரைப் படை வீரர் நாலைந்து பேர்களை நியமித்து, அவனைத் தொடர்ந்து போய்ப், பிடித்து தர்பாரில் கொண்டு வந்து சேருங்கள்” என்று அரசர் கட்டளை பிறப்பித்தார். அதன்படியே செய்வதாக, மந்திரி சம்மதம் தெரிவித்தார்.

* * *

மறு நாள் காலை 8 மணிக்கு, தர்பார் கூடுவதற்கு சற்று முன்னதாக நாலைந்து குதிரை வீரர்கள் தயாராக காத்திருந்தனர். அப்போது, வழக்கம் போல், இளவரசன் ஹஸன் பாஷா, பக்கீர் உடையில், தன் குதிரையில், அதி வேகமாக அரச சபையைக் கடந்து சென்றான். உடனே, அரசாங்க குதிரைப் படை வீரர்களும் அவனைப் பின் பற்றி ஓடினர். இளவரசக் குதிரை வெகு தூரம் முன்னேறிச் சென்று விட்டது. எனினும் குதிரைப் படையாளரும் முன்னேறிச் சென்று, அக்குதிரையைத் தடுத்து நிறுத்தி, அரச குமாரனைப் பிடித்து, அரச சபைக்கு அழைத்து வந்தனர்.

இளவரசன், இப்படி நடக்க வேண்டும்; தன்னை அரச சபைக்கு அழைக்க வேண்டும்; தான் அரசருடன் சம்பாஷித்துப் பேச வேண்டு மென்றுதானே எதிர்பார்த்து

கொண்டிருந்தான். அவ்வாறே நிகழ்ந்த சம்பவம் 'பழம் நழுவி பாலில் விழுந்தது' போலாயிற்று.

* * * *

எனவே, இளவரசன், அரசருடைய தர்பாரில், மன்னர் திருச் சமுகத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். அரசர், அந்த அபூர்வ மனிதனை, உள்ளங்கால் முதல் உச்சுவரை கூர்ந்து நோக்கினர். அவன், பக்கீர் உடையில் சன்னியாஸியைப் போல் காணப்பட்டாலும், அவன் அரச குலத்தைச் சேர்ந்த வீரனாகத் தான் இருக்கவேண்டு மென்று அரசர்க்குப் புலப்பட்டது. எனவே, இளவாலிபனை மரியாதையுடன் அருகில் அழைத்துக் கேட்கலானர்:

"ஏ வாலிபனே! நீ யார்? தினமும் இப்படி குதிரை மீது ஏறி வேகமாய்ப் போகிருயே ஏன்? உன்னுடைய இலக்ஷியம் என்ன? நீ என்ன காரியமாக வந்தாய்? எந்த ஊர்? எந்த தேசம்?" என்று வினவினர்.

அதற்கு இளவரசன் "நான் இன்ன தேசத்து அரசனுடைய மகன்; என் பெயர் ஹஸன் பாஷா, இங்கு நான் வந்த காரணம், அழகிற் சிறந்து கீர்த்திப்பிரதாபம் பெற்றுள்ள தங்கள் திருக் குமாரி யான ஹுஸ்ன் ஆராவைத் திருமணம் செய்து கொள்ள வேண்டு மென்பது என்னுடைய குறிக்கோள். ஆனல் என்னைப் போலவே, இங்கு நூற்றுக் கணக்கான அரச குமாரர்கள், வந்து கூடார மடித்துக் காத்துக் கொண்டு கிடப்பதை அறிந்தேன். ஆனல் நான் அவர்களைப் போல் கையாலாகாதவன் அல்ல; எந்த விதத்திலும் இந்த இலக்ஷியத்தில் முனைந்து வெற்றி பெற்றே தீர வேண்டு மென்று முடிவு செய்து வந்திருக்கிறேன். இதற்குத் தங்களுடைய ஆசீர்வாதமும் அனுமதியும் வேண்டும். தங்களை நேரில் சந்திப்பது இலேசான வேலை யல்லயென்று அறிந்து, தங்கள் கவனத்தை என் பக்கம் ஈர்ப்பதற்காகத்தான் இவ்விதம் செய்தேன். எனது துணிச்சலை தாங்கள் மன்னித்து, என்னை ஆதரித்து, தங்கள் தாஸனாக ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று மிக மரியாதையாயும் மிருதுவாயும் வேண்டிக் கொண்டான்.

* * * *

அரசருக்கு இளவரசன் மீது பிரியம் ஏற்பட்டது. அவனது துணிச்சலையும், நல்ல குணத்தையும், ரூபலாவண்யத்தையும் கண்டு மனத்துக்குள் திருப்தி யடைந்தார்.

(தொடரும்)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

187082

# கீமியாயே ஸஆதத்து

தமிழ் மொழிபெயர்ப்பு.

1-வது, 2-வது, 3-வது, 4-வது ஆக 4-வால்யங்கள்.

இந்த கிதாபில் உள்ள சில விஷயங்களாவன:—

1-வது, தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் அறியாமல் பின்னை யொன்றைத் தானென்றும் தலைவனென்றும் கருதுகிறபேர்களுக்கு இக்கிதாபு உணர்வை வர வைக்கும்.

2-வது, அநாதார பதர் மொழிகளால் நிறைந்த சில அஞ்ஞான புத்தகங்களை மெஞ்ஞான பொக்கிஷங்களென மதித்து மருண்டு கிடக்கின்ற மதியீனர்களின் மனதைத் திருப்பும்.

3-வது இகபரங்கள் இன்னதென்று அறியாமல் இலோக இச்சைகளிலேயே மூழ்கி இரவும் பகலும் இதற்கே தொண்டு செய்து பரலோக வாழ்க்கையைப் பற்றி சிந்திக்காதிருக்கிற பேதை மாந்தர்களுக்கு இகபர விருப்பத்தை யூட்டும்.

4-வது, இபாதத்து செய்கிறவர்களுக்கு சுன்னத்து ஜமாஅத்துகளின் இஃதிகாது, இல்மை தேடல், ஒலுவு, முழுக்கு, தயம்மம் முதலிய சுத்தி வகைகள், தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு, குர்ஆன் ஓதல், திக்று அவ்றாது இவைகளின் அஹ்காம்களும் அஸ்றாருகளும் சொல்லப்பட்டிருப்பதால், இது அமல் செய்கிறவர்களுக்கு மிகவும் பிரயோஜனத்தைக் கொடுக்கும். இதன் அருமை கிதாபை பார்த்தால் தான் அறியலாம்.

இதன் 1-வது வால்யத்தில் இபாதத்துகளுடைய பயானும் 2-வது வால்யத்தில் முஆமலாத்துடைய பயானும் 3-வது வால்யத்தில் முஹ்லிகாத்தின் பயானும் 4-வது வால்யத்தில் முன்ஜியாதுடைய பயானும் அடங்கியிருக்கின்றன.

1-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 3-00
2-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 3-60
3-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 5-00
4-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 5-60

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

புதிய நூல்! அரிய நூல்!!

## அஸ்ஸலாத் என்னும்

# தொழுகை

(படங்களுடன்)

இக்காலை நம் பாமர முஸ்லிம் சகோதரர்களில் பலர்' அரபு (உர்து) ஓதத் தெரியாத காரணத்தினால் கலிமா, ஈமான், இஸ்லாம், தொழுகை முதலிய முக்கிய விஷயங் கூட தெரியாமல் இருக்கின்றனர். அநேகர், தொழுகையில் நின்று என்ன செய்வது, என்ன ஓதுவது என்று தெரியாமல் திகைக்கின்றனர்.

அப்படிப்பட்டவர்களின் நன்மைக்காகவே, இந்நூல் சுத்தத் தமிழில் எளிய நடையில் புரியும் வண்ணம், ஜனாப் மவ்லவி, டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி) அவர்களால் இயற்றப்பட்டு, ஆங்காங்கு அரபு பிளாக்குகளும், தொழுகைப் படங்களும் சேர்க்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கிறது.

இந்நூல் கைவசம்இருந்தால் ஈமான் இஸ்லாம் முதலிய விபரங்களைத் தெரிந்து கொள்வதோடு, சுயமே தொழுது கொள்ளும் விபரத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

தொழுகையில் ஓதும் நிய்யத்துகள், ஸூராக்கள், துஆக்கள், ஓதல்கள் யாவும் அரபியில் போட்டு அதன்கீழ் உச்சரிப்பும் கருத்தும் போடப்பட்டிருக்கின்றன.

இன்னும், இந்நூலில் ஒலுவு, குஸ்லு, தயம்மும், ஜனாஸா தொழுகை, ஜும்ஆ தொழுகை, ஈது தொழுகை, ஜக்காத், நோன்பு, ஹஜ்ஜு முதலிய விபரங்களும் இருக்கின்றன.

கடைசியில் ஸூராக்களும் தொழுகை நேர அட்டவணையும் சேர்க்கப் பட்டிருக்கிறது.

ஷாபி கிதாபு வேறு, ஹனபி கிதாபு வேறு.

ஷாபி கிதாபு கிளேஸ் காகிதம் ஹதியா நயா பைசா. 80

ஷை றப் காகிதம் ஹதியா நயா பைசா. 60

ஹனபி கிதாபு கிளேஸ் காகிதம் ஹதியா நயா பைசா. 80

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.